[illegible]

[illegible]

ഷേക്സ്പിയ.

[illegible] (1)

M.D.R.S. [illegible]

B.B. [illegible] 3.1.1880

O111,2J5SH,H
M80

116202

LAMB'S

TALES FROM SHAKSPERE.

HAMLET.

TRANSLATED INTO TAMIL

BY

V. VISVANATHA PILLAY,

Translator in the Department of Public Instruction.

SECOND EDITION.

MADRAS:

PUBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY, AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

1880.

COPYRIGHT.

Price One Anna. விலை அணா, க.

சென்னைப் பாடசாலைப் புத்தகச்சங்கத்தார் விற்பனைசெய்யும்

சிறுபுத்தகங்களின் பட்டி.

ஜனவிநோதினியின்

விசேஷப் புதுப்பதிப்புகள்.

	அணா	பை
ஆரணியமித்திரரும் சத்துருக்களும்	0	1
ஒரு ரூபாய் சொல்லிய தன் வரலாறு	0	1
நீராவியின் வல்லமையை பூர்வீல அறிந்த கதை	0	
பொன்னிலும் ரூபாய் சிறந்தது	0	
மரத்தின் பழம் ஏன் கீழே விழுகிறது?	0	
இன்பத்தைத் துன்பம் விவாகஞ்செய்தது	0	
இவ்வுலகத்திற்குமேல் என்ன இருக்கிறது?	0	
ஒரு நியாயாதிகாரியின் கதை	0	
ஜப்பான் தேசத்து முற்கால தற்கால நிலைமை	0	
புலியினிடத்துச் செய்த சாகஸம்	0	
பொன்னூல் கதை	0	
இத்தேச வைத்தியவிஷயம்	0	
செல்வத்தையும் வறுமையையும் பற்றிய கதை	0	2
சமுத்திரம் உப்பாயிருப்பதேன்?	0	2
பொருள்வரும் வழி	0	2
ஆசையும் கடமையும் முரணியது	0	3
நான் அது செய்யமாட்டேன்	0	3
தர்மமே ஜயம்	0	3
பெற்றோருக்குக் கீழ்ப்படிக்கை	1	
மந்திரவித்தை சொல்லது மெய்ம்மை பொய்ம்மையைப் பற்றிய கதை	1	

LAMB'S
TALES FROM SHAKSPERE.

HAMLET.

TRANSLATED INTO TAMIL

BY

V. VISVANATHA PILLAY,
Translator in the Department of Public Instruction.

SECOND EDITION.

MADRAS:
PUBLISHED BY THE MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY, AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

1886.

COPYRIGHT.

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS, 1880.

221D
8213

ஷேக்ஸ்பியர் நாடகக் கதை.

2210

ஹாம்லெத்.

தமிழ் மொழிபெயர்ப்பு.

இஃது

துரைத்தன வித்தியாவகுப்பில்

அதிபராதிகாரிய

வீ. விசுவநாதபிள்ளை

இயற்றியது.

இரண்டாம் பதிப்பு.

சென்னை:
ஜி. க. அ. சங்கத்தாரது அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

௲௮௱௮௰.

TALES FROM SHAKSPERE.

HAMLET, PRINCE OF DENMARK.

டென்மார்க் அரசன் ஹாம்லெத்.

டென்மார்க் தேசத்து அரசன் ஹாம்லெத் சடிதியில் இறந்து இரண்டு மாசத்திற்குள், அவன் மனைவி கர்த்ரூட் தன் மைத்துனனாகிய க்லௌதியூஸை மணம்புரிந்தாள். தேச வழக்கத்தைச் சிந்திக்காமல் இத்தனை விரைவில் மணம்புரிந்த ராஜவிதவை மதிகெட்டவளென்று வைதார் சிலர்; கொண்டகணவன் இறந்ததை நினைத்து உருகாத வன்னெஞ்சுடைய பாதகியென்று தூற்றினார் சிலர்; குணம் கெட்ட நீலியென்று திட்டினார் சிலர். அவள் செய்தது சர்வ ஜனங்களுக்கும் வெறுப்பாயிருந்தது. காரணம் இது:—புனர்விவாகம் செய்த க்லௌதியூ ரூபத்திலாவது குணத்திலாவது எவ்விதத்திலும் இறந்த அரசனை ஒத்தவனல்ல; அவன் காணும் எவரும் அவமதிக்கும் குரூபி; அறிந்தோர் அலக்ஷியஞ்செய்யும் அயோக்கியன்; ராணியை மணம்புரிந்து, பட்டத்திற்கு முறைமையான சுதந்தரமுள்ள இளைஞனாகிய ராஜகுமாரன் ஹாம்லெத்தைத் தொலைவித்து, டென்மார்க்கு ராஜ்யத்தில் செங்கோல் செலுத்தக் கருதி, க்லௌதியூ தன் சகோதரனை அந்தரங்கத்தில் கொன்றானென்று சிலர் உள்ளத்தில் சந்தேகம் பிறந்ததும் உண்டு.

அரசன் மனைவி அபுத்திபூர்வமாகப் புனர்விவாகம் செய்ததைப்பற்றி, முக்கியமாய் இளைஞனாகிய அவள் மைந்தனுக்கு மிகுந்த விசாரம் உண்டாயிற்று. அவன் சடிதியில் காலஞ்

2211
322.3

கூடிய தந்தையை நினைந்து, நெஞ்சுருகிக் கடவுளைப்போல வணங்கினான். அவன் சிறிதாயினும் நெறிமுறை தவறாத மாணியாதலால், தன் தாய் குலமாதர்க்குரிய நெறிதவறிச் செய்த அதிக்கிரமத்தை எண்ணி எண்ணி மனம் நொந்து வருந்தினான். தந்தை இறந்ததுபற்றித் தீராத் துயரமும், தாய் மறுமணம் செய்ததுபற்றித் தொலையா வெட்கமும் மேலிட்டதனால், அவன் உள்ளத்தில் ஆறாத் துக்கம் குடிகொண்டது; முன் அவனுக்கு இருந்த அகமகிழ்ச்சி பற்றறத் தொலைந்தது; அவன் முகக்களையும் காந்தியும் சிறிதும் இல்லாதொழிந்தன; கல்வியில் உண்டாயிருந்த இச்சையைக் கண்ட கனவுபோல் அவன் மறந்தான்; ராஜகுலத்திற் பிறந்த இளைஞர் பயிலத் தகும் வேட்டை முதலிய விநோதங்களில் அவனுக்கு எள்ளளவும் பிரீதி இல்லாமற்போயிற்று; இந்தப் பூலோகமோ களைதிரளாய் அடர்ந்தோங்கி வளர்ந்து, நறுமணம் கமழும் புஷ்பச்செடிகளைத் தலையெடுக்கவொட்டாமல் சிதைவிக்கும் புற்பூண்டுகளையுடைய காட்டிற்கு ஒப்பாக அவன் எண்ணத்தில் தோன்றியது; இத்தனை நாள் இங்கிருந்தது போதுமென்று அவன் மனம் அலுப்புற்றது; மேலான சிந்தையுள்ள இளைஞனாகிய ஒரு ராஜகுமாரனுக்கு அரசுரிமை விதிப்படி வரும் பட்டத்தைப் பிறர் அபகரித்துக்கொண்டால், அவன் மனம் புண்ணாகி, இந்தப் பெருவிக்கினத்தை எளிதில் மறவானே; ஆனாலும், இறந்த அரசன் மைந்தன் நெஞ்சை வருத்தியது ராஜாதிகாரம் கைகடந்துபோகுமென்னும் பயமல்ல, தந்தை இருக்கும்பொழுது, அவரில் அன்புகூர்ந்து, அவர் சொற்படி நடந்து, நகமும் சதையும்போல் அவருடன் நட்புப் பொருந்தி, அவரை விட்டு விலகாதிருந்த தன் தாய், அன்பும் தயாளசிந்தையுமுள்ள அவர் இறந்து இரண்டு மாசஞ் செல்லுமுன், மட்டுமரியாதையின்றி, மணமுறை தவறி, மைத்துனனோடு புனர்விவாகம் செய்ததே. மேலும், அரசர்க்குரிய உத்தம லக்ஷணம் ஒன்றுமில்லாத ஒருவருக்கு மனைவியாகத் தீர்க்காலோசனையின்றி அவள் உடன்பட்டதுதான் அவன் உள்ளத்தைக் கத்திகொண்டு அறுப்பதுபோலப் பின்னும் வருத்தியது. பத்து ராஜ்யத்தைப் பறி

கொடுத்தாலும் சிறிதும் தணிவுறியாத அதிசய குணமுடைய அந்தக் கௌரவமுள்ள ராஜ இளைஞனை மனமெலிவித்து, துணிவொழிவித்து, அவனுக்கு என்றும் மறத்தற்கு அரிய மனத்துன்பம் கருவித்தது இதுவே.

அவன் துக்கத்தை மறப்பிக்கத் தாய் செய்த உபாயமும், சிறியதந்தை செய்த முயற்சியும் சிறிதும் சித்திக்கவில்லை. தந்தை இறந்த துக்கத்திற்கு அறிகுறியாக மைந்தன் உடுத்த கறுப்பு வஸ்திரத்தை ஒரு நாளும் களையவில்லை. தாய்க்குப் புனர்விவாக மகோத்சவம் நிறைவேறிய மங்கலதினத்திலும் அவன் அவ்வஸ்திரமே தரித்திருந்தான். அரண்மனையில் அன்று நடந்த களியாட்டொன்றிலும் அவன் மனம் கலக்கவில்லை. அந்த நாள் அவன் குலத்தில் தீராவசையை நிலைநிறுத்தும் தீயநாளென அவன் சிந்தையில் தோன்றியது.

தந்தை இறந்த வகை சந்தேகமறத் தோன்றாததுபற்றியே, அவனுக்குப் பின்னும் அதிக மனத்துன்பம் உண்டாயிற்று. அரசன் சர்ப்பம் தீண்டி இறந்தானென்று க்லௌதியு சொல்லக் கேட்டு, ராஜ இளைஞன் அந்தச் சர்ப்பமே க்லௌதியு என்றே அனுமானித்தான். விவரம் சொல்லில், ராஜ கிரீடத்தை அபகரிக்கும்பொருட்டு அவன் தந்தையைக் கொலைசெய்தானென்றும், கடித்துக் கொன்ற சர்ப்பம் சிங்காதனம் ஏற இடம் பெற்றதென்றும் அவனுக்குச் சிந்தனை தடித்தது.

இவ்வுத்தேசத்தில் உண்மை எவ்வளவோ, தாயைக்குறித்து என்ன நினைக்கத் தகுமோ, இக்கொலைத்தொழிலுக்கு அவள் அந்தரங்கத்தில் உடன்பட்டிருந்தாளோ, அவள் அறிந்து, அவள் அனுமதிப்படி கொலைத்தொழில் நடந்ததோ அல்லவோ, இந்த விவரம் ஒன்றும் ஐயந்திரிபறத் தெரியாததனாலும் அனுதினமும் அவன் மனம் தாமரை இலையில் நீர்த்துளிபோலத் தளம்பித் தடுமாறியது.

அச்சம் தகப்பன் சாயலான ரூபம் ஒன்று அரண்மனை வாசலுக்கு எதிர் உயர்தளத்தில் அர்த்தராத்திரியில் அடுத்து இரண்டு மூன்று நாள் சாமம் காக்கும் ராஜசேவகர் கண்டார்களெனப் பிறந்த சத்தம் ராஜகுமாரன் செவிக்கு எட்டு

டிற்று. அது அரசன் தரிக்கும் கவசத்தையே பாதாதிகேசபரியந்தம் தரித்துக்கொண்டிருந்தது. அந்த ரூபத்தைக் கண்டவர்களில் ஒருவன் ஹாம்லெத்தின் இன்னுயிர்த் தோழனாகிய ஹொரேஷோ. கண்ட காலத்தையும் கோலத்தையும் பற்றி அவர்கள் அனைவருடைய வாய்ப்பிறப்பும் ஒத்திருந்தது. அவர்கள் வாக்குமூலத்தின் பொருள் இது: கடிகாரத்தில் பன்னிரண்டு மணி அடிக்கவும், ரூபம் வெளிப்பட்டது. அதன் முகம் மலர்ந்திருக்கவில்லை, சற்று வாடியிருந்தது; முகத்தில் கோபம் தோன்றவில்லை, வியசனம் மேலிட்டிருந்தது; விகாரமாகத் தோன்றிய அதன் தாடி ரோமம் அரசனைப்போல் இளநரை கலந்திருந்தது; அவர்கள் வார்த்தை சொன்னபொழுது அது உத்தரம் சொல்லவில்லை; ஒரு முறை மாத்திரம் அது தலை நிமிர்ந்து பேச இசைந்து குவிப்பதுபோல் உன்னிப் பார்த்தது: பார்க்கவும், பொழுது புலருமுன் விடியற்சாமக் கோழி கூவிற்று. கண்ணிமைப்பொழுதில் மேகம் மின்னி மறைந்ததுபோல், அவர்கள் கண்ட ரூபம் நின்ற இடத்தை விட்டு நீங்கிச் சென்றது.

சாமக் காவற்சேவகர் சொல் நம்பத்தக்கத் பொய்யாகத் தோன்றவில்லை, உறுப்புகள் அனைத்திலும் பொருந்தியிருந்தது. அது கேட்டவுடன் வாலிப ராஜகுமாரனுக்கு அடங்காத ஆச்சரியம் உண்டாயிற்று. அவர்கள் கண்டது காலஞ்சென்ற தந்தையின் ரூபமென்று அவன் நிச்சயித்து: "இந்த ரூபம் தோன்றியது வியர்த்தமல்ல, ஏதோ சங்கதி சொல்லவந்திருக்கவேண்டும். இதுவரையில் அவர்களுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தும், அது என்னைக் கண்டால் வாய் திறந்துபேசும்." என மனம் தேறி, அன்றிரவு அதைக் காணினும் காணலாமென்று எண்ணி, காவற்சேவகருடன் விழித்திருக்கப் பிரதிக்ஞை பண்ணினான். பொழுதுபட்டு இருளுமட்டும் அவன் மிகப் பதைத்துக்கொண்டிருந்தான்.

அர்த்தமனகாலமாகி அடர்ந்த இருள் படரவும், அரசன் மைந்தன் ரூபமொன்று வந்துலாவியதென வதந்தி பிறந்த உயர்தளத்தில் ஹொரேஷோ, மார்செல்லூ எனும் இருவ

ருடன் போய் நின்றான். அன்றிரவு குளிர் அதிகம், தம்பனிக் காற்று வீசியது, தேகமெங்கும் குளிரோடி விறைத்தது. ஹாம்லெத், ஹொரேஷோ, மார்செல்லூ இம்மூவரும் சகிப்பதற்கு அரிய குளிர் அன்றிரவு தலைப்பட்ட காரணம் ஏதென்று சம்பாஷித்தார்கள். சடிதியில் ஹொரேஷோ ரூபம் இதோ வந்ததென்று கூவினான்.

தன்னைப் பெற்று வளர்த்து முன்னுக்குக் கொண்டுவந்து சடிதியில் இறந்த அரிய பிதாவின் ரூபத்தைக் கண்டவுடன், ஹாம்லெத்துக்கு ஆச்சரியமும் அச்சமும் உண்டாயின. அது தீக்குணமுள்ளதோ நற்குணமுள்ளதோ, தமது நன்மைக்கு ஆக்காலத்திற்கு வந்ததோ, போக்காலத்திற்கு வந்ததோ என விவரம் தெரியாமல் சந்தேகஸ்திதியிலிருந்து வருந்தியதனால், அவன் நெஞ்சுடைந்து தடுமாறி, அண்ணாந்து பார்த்து, வானத்தை நோக்கி: சம்மனசுகளே, விண்ணிற் சஞ்சரிக்கும் தேவதூதர்களே, இந்த ஆபத்திற்குத் தப்புவித்து என்னை ரக்ஷித்தருள்புரியவேண்டுமென்று பிரார்த்தனை செய்தான். வரவர அவனுக்குப் பயம் தெளிந்தது. ரூபம் அச்சம் அவன் தந்தைபோலத் தோன்றியது. அன்றியும், அது மிகவும் பரிதபித்து வருந்துவதுபோலும், அவனுடன் சம்பாஷிக்க ஆசைகொள்வதுபோலும் அதன் முகக்குறி காட்டியது. இறந்த தந்தை மீண்டும் பிழைத்தெழுந்துவந்து கண்ணுக்கெதிரில் நின்றதுபோல் வித்தியாசமில்லாமல் காணப்பட்டதனால், அவருடன் பேச ஹாம்லெத்துக்கு வாய் பதைத்தது; பிதாவைப் பெயர் சொல்லி அழைக்க அவன் பின்னிடவில்லை; "ஹாம்லெத்! ராஜாவே! எனது அரிய தந்தையே! இறந்தபின் தங்கள் உடல் முறைமைப்படி சுடுகாட்டில் க்ஷேமிக்கப்பட்டது பார்த்திருக்கிறேனே, தாங்கள் மீண்டும் எழுந்து வெண்ணிலாக்காலும் இந்த இரவில் மண்ணுலகத்திற்கு வந்த காரணம் ஏதென்று அறிய அபேக்ஷிக்கிறேன்; என்மேல் ஆணைப்படி சொல்லுங்கள்; சலித்துத் திரிக்கும் தங்கள் ஆவிக்கு உபசாந்தி செய்யத்தகும் ஏதாயினும் எங்களாலாகுமென்றறிந்தால், அதைத் தயைகூர்ந்து சொல்லுங்

கள்: ஆருமனைத்தும் ஆவலுடன் செய்வோம்" எனப் பரிந்து கேட்டான். கேட்கவும், அந்த ரூபம் சற்றெட்டப் போய், ஒதுக்கிடத்தில் தனித்திருந்து சம்பாஷிக்கும்பொருட்டு, தன்னுடன் வரும்படி ஹாம்லெத்துக்குக் கையிற்பிடித்த தடியால் குறிப்பித்தது. அந்தக் குறிப்பைக் கண்ட ஹொரேஷோவும், மார்செல்லுவும் பாலிய ராஜகுமாரனைப்பற்றி விசாரப்பட்டு, "நமக்குத் தோன்றியது உன் தகப்பனது ரூபமென்று உறுதி சொல்லக்கூடாதே; மனுஷர் உயிர்க்குத் தீங்கு செய்ய நரகிம் ராக்ஷஸ துஷ்டரூபமாயிருப்பினும் இருக்கலாம்; அப்படி இருந்தால், அது உன்னை நயம் சொல்லி அழைத்துப்போய், சமீபத்திருக்கும் கடலில் விழுத்திக் கொன்றாலும் கொல்லும்; அல்லது குறவரும் மருளும் குன்றின் சிகரத்தில் உன்னை ஏற்றி, உன் கண்ணுக்கு எதிரில் கோரவடிவு தாங்கி நின்றாலும் நிற்கும்; நீ அதைக் கண்டு, மதிமயங்கி, அறிவொழிந்து, உடல்மெலிந்து மடிவாய்: ஆதலால், எவ்விதத்திலும் ரூபத்தை நம்பித் தொடராதே; தொடர்ந்தபின் நேரிடும் ஆபத்தினின்று உன்னைத் தப்புவிக்க வல்லவர் இல்லை" எனப் பலவாறு புத்திமதிகள் சொல்லி, இளைஞனைத் தடுக்கப் பார்த்தார்கள். அவர்கள் சொன்ன நற்புத்தியும், அவர்கள் செய்த விண்ணப்பமும் அவன் செய்த மன உறுதியை எவ்வளவும் தவிர்க்கவில்லை. மரணத்திற்கு அஞ்சுபவர்க்கே பிராணன் பெரிது. ஹாம்லெத்து தந்தை இறந்தபின்பு தன் பிராணனைத் திரணமும் பொருள் செய்யாதிருந்தனன்; சடுதியில் பிராணாபாயம் வரினும், அவன் அதற்கு அஞ்சான். சதாகாலமும் அழியாதிருக்கும் தன்மையுள்ள ரூபத்தைப்போல, தனது ஆத்மாவும் அழிவற்றதாதலால், அதற்கு அந்த ரூபத்தால் ஏதும் தீங்கு விளையாதென்று அவன் மனம் தேறினான். அச்சமயத்தில் அவன் ஆண் சிங்கத்தைப்போலத் துணிவும் வீரமுமுடையோனாகி, அவர்கள் பிடித்த பிடியை ஒரு வீச்சில் திமிறி விலகி, ரூபம் வழி காட்ட, அடிபிடித்துத் தொடர்ந்தான்.

மட்டாக்கையில் பிரத்தியேகமாய் இருவரும் போய்ச் சேர்ந்தபின், முதலனியில் மௌனம் சாதித்த ரூபம் வாய்

திறந்து: "பிள்ளாய், என்னை அன்னியனென்று எண்ணுதே; நான் உனது தந்தை ஹாம்லெத்; நான் அநியாயமாகக் கொலையுண்டு இறந்தேன்; என்னைக் கொன்றவன் என்னுடன் பிறந்த உனது சிற்றப்பன் க்ளாடியஸ். அவனைக் குறித்து உனது உள்ளத்தில் பிறந்திருக்கும் சந்தேகம் நிர்நிமித்தமானதல்ல; அவன் என்னைக் கொன்றது என் தாரத்தையும் கிரீடத்தையும் அபகரிக்கும்பொருட்டு. நான் பிரதிதினமும் அபராண்ணகாலத்தில் நந்தனவனத்தில் படுத்து நித்திரைசெய்வதறிவையே:" ஒரு நாள் மெய்மறந்தயர்ந்து நித்திரைசெய்யும் சமயமறிந்து, அந்த ராஜத்துரோகியாகிய சகோதரன் அரவமின்றி, மெல்லென அடிமேலடி வைத்து, கட்டிலின் அருகே வந்து நின்று, வச்சநாபி ரசத்தை என் செவித்துவாரத்தில் ஊற்றினான். "வச்சநாபி மனுஷர் பிராணனை நொடிக்குள் வதைக்கும் படுவிஷம். செவியில் விழுவும், அது பாதரசம்போலத் தேகத்தில் உள்ள உதிர நரம்புத் துவாரங்கள்தோறும் விரைந்தோடி, ரத்தத்தைச் சுவறுவித்தது. உதிரம் சுவறவும், நான் குஷ்டரோகியைப்போலானேன்: எனது உடம்பெல்லாம் வறண்டு, வேனிற்காலத்தில் நீர் வற்றிய குளத்தின் அடித்தரை முகம் நிமர் வெடிப்பதுபோல, காண்பவர் ஏங்கித் திகைக்கச் சிற்றுச் சிற்றாக வெடித்தது. இங்கு வருமெனும் சிந்தையின்றிச் சிங்காரவனத்தில் பட்டப்பகலில் படுத்து அயர்ந்து தூங்கும் பொழுது, என்னுடன் பிறந்த அந்தப் பாதகன், சிரசில் தரித்துச் செங்கோல் செலுத்தும் எனது கிரீடம், என்னிரு கண்மணியினும் அரிய தாரம், இவ்வுலகில் எவ்வகைச் செல்வத்தையும் பெற்றனுபவித்தற்கு ஆதாரமாகிய ஜீவன் இம் மூன்றையும் ஏககாலத்தில் அபகரித்தான். மகனே, உனது மேல் ஆணைப்படி ஒன்று சொல்லக்கேள்: உனது அரிய தந்தையின்மீது நீ ஒரு நாளாவது அன்பு கூர்ந்தது மெய்யானால், உன் தந்தையைச் சர்ப்பனைசெய்து கொன்ற பரமதுஷ்டனை நீ எவ்விதத்திலும் கொன்று பழிக்குப்பழி வாங்காதிராய். நான் ஜீவனோடிருக்கும்பொழுதே உன் தாய் நெறி தவறி, தற்

பழித்து, என்னைக் கொன்ற கொலைஞனை இதமாக மணம் புரிந்திருப்பதை நினைக்க நினைக்க என் மனம் நெருப்புப் பற்றி எரிகின்றது. போனது போகட்டும், நீ பகைதீர்க்கவேண்டும். என்னைக் கொன்ற கொடியனாகிய உன் சிற்றப்பன் உயிரை வதைத்து க்ஷாத்திரம் சாதிக்க உன்னால் ஆகும் எத்தனங்கள் அனைத்தும் செய்யலாம். நீ செய்வது எனக்கு இஷ்டமே தவிர, வேறல்ல. உன் தாய்மேல் மாத்திரம் கை வைத்து அவளுக்கு ஒரு தீங்கும் செய்யாதே;" அவளைத் தெய்வம் கேட்கும்; அன்றியும் பிறர் "அவளுக்குச் சிறைசெய்யவேண்டுவதேன்? கொடுக்கின்றும் கொட்டி ஜீவராசிகளை வருத்தும் கொடுவிஷமுள்ள தேள்போலும், கூர்முனையால் தைத்துத் தசையைக் கிழிக்கும் நெருமுட்போலும் அவள் நெஞ்சே அவளை அனுதினமும் வருத்தும்" என எச்சரித்தது. தந்தை ரூபம் சொன்ன சொற்படி அணுவும் தவறாமல் நடக்க ஹாம்லெத் வாக்குறுதி சொன்னான். சொல்லவும், ரூபம் அக்கணப்பொழுதிலேயே மறைந்துபோயிற்று.

ஹாம்லெத்து ஏகாந்தமாய் அவ்விடத்தில் நின்றான். நிற்கும் பொழுது: "இந்த நிமிஷமுதல் எனது தந்தையின் ரூபம் எனக்குச் சொன்ன சொல்லும், கற்பித்த கற்பனையும் தவிர, மற்றெதுவும் எனது உள்ளத்தில் குடிகொள்ளாதிருக்கக்கடவது. எனது ஞாபகத்தில் இருக்கும் எதையும், ஏட்டிற் கற்றாவது, காண்டல் கருதல் முதலிய சாதனங்களால் கண்டு சிந்தித்தாவது அறிந்த கல்விப்பொருள் யாவையும் இன்னமைப்பொழுதில் மறந்துபோகக்கடவேன்" எனத் தன் உள்ளத்தில் நிர்ணயித்தான். தனக்கும் ஆவிக்கும் நடந்த சம்பாஷணை வரலாறுகளைத் தன் பிராணபதமான தோழன் ஹொரேஷோ ஒருவனுக்கன்றி, ஹாம்லெத் இவ்வுலகில் மற்றெவருக்கும் அறிக்கை செய்யவில்லை. அன்றிரவு கண்ட காட்சியை அவரவர் நெஞ்சின் அகத்தில் அந்தரங்கமாய் வைத்திருக்கவேண்டுமென்று அவன் ஹொரேஷோவுக்கும் மார்ஸெல்லஸுக்கும் வற்புறுத்திச் சொன்னான்.

முன்னமே தந்தை இறந்ததுபற்றி உள்ளம் நெக்குருகி, உடல் மெலிந்திருந்த ஹாம்லெத்து ரூபத்தைக் கண்டபின், அவன் மனம் குன்றிக் குலைகுலைந்தது, அவன் அறிவு திரிந்து மாறாடியது. "இந்த விபரீத குணம் நிலைநிற்குமானால், என் தகப்பன் இறந்த வகையைப்பற்றி எனக்கு விபரம் தெரியுமென்றும், தமக்கு ஏதாயினும் தீங்கு செய்யச் சமயம் பார்த்திருக்கிறேனென்றும் என் சிற்றந்தை நினைத்து, யாவகைச் சாப்பனையையும் தவிர்க்கும் உபாயம் சமயம் முந்துமுன் செய்வார். நான் சுத்த பித்தனென்றே கபடநாடகசாலம்பண்ணித் திரிவேனானால், அவர் சந்தேகம் தெளியும்; என்னாலே பாரமான தீங்கு ஒன்றும் தமக்கு நேரிடாதென்று அவர் மனம் தேறுவார். அன்றியும் எனது மனம் கலித்துத் துடிதுடித்து வருந்துவது, நான் பித்தனென்று சூதாக நடித்துத் திரிவதனால், எவருக்கும் தோன்றாமல் அந்தரங்கமாயிருக்கும்" என ஹாம்லெத் தனக்குள்ளே திர்க்கயோசனைசெய்து, அன்றுமுதல் காணும் எவரும் இவன் சுத்த பித்தன் என்றெண்ணும்படி நடக்கச் சங்கற்பித்தான். இது அபூர்வ சங்கற்பந்தான்.

அந்த நிமிஷம் தொடங்கி ஹாம்லெத் தரித்த வஸ்திரம் விகாரம், பேசின பேச்சு விகாரம், செய்த செய்கைகள் விகாரம், நடந்த நடக்கை விகாரம், யாவும் விகாரமாயிருந்தன. அவன் நடிக்கத்தொடங்கிய நடனத்தை அணுவும் தவறாமல் நடித்தான். அரசனும் ராக்கினியும் இளைஞனைப் பித்தனென்றே நம்பினார்கள். பிதா இறந்த துக்கத்தின் மிகுதியால் இவ்வித விபரீத குணம் குறிகள் தோன்றலாகுமென்று அவர்கள் சொப்பனத்திலும் எண்ணவில்லை. — ரூபம் தோன்றிய வரலாற்றைச் சிறிதும் அறியாத அவர்களுக்கு இவ்வெண்ணம் உண்டாவதற்கு நிமித்தம் இல்லையே. — அவனுக்கு வந்த வியாதி பெண்ணாசைமயக்கமென்று அவர்கள் ஊகித்து, அவன் உள்ளத்தைக் கவர்ந்த சிறந்த உரு அமைந்த பெண் இன்னாளென்று உத்தேசித்தார்கள்.

மேற்சொல்லியபடி ஹாம்லெத்துக்குத் தீராத்துயரம் நேரிடுமுன், அவன் அபூர்வ சுந்தரி ஒருத்தியைத் தன் உயிர்போல்

எண்ணி, அவள்மீது ஆசைகூர்ந்திருந்தான். அவ்வழகிய பெண் அரசனுடைய பிரதான மந்திரியாகிய பொலோனியூவின் புத்திரி, அவள் பெயர் ஒபீலியா. ஹாம்லெத் அவ்வற்புத ரூபவதிக்கு இனிய கடிதங்கள் எழுதியனுப்பியிருந்தான்; என்றும் அழியாத அன்பு தம்மிருவருக்கும் உள்ளதென்பதற்கு அறிகுறியாகக் கணையாழிகள் கொடுத்திருந்தான்; அன்றியும், தனக்கு அவள்மீதுள்ள அன்பு மெய்யன்பு என்பதைப் பலவாறு விளக்கியிருந்தான்; கொஞ்சமும் பங்கமின்றி அரசர் முறைமைப்படி அவளை மணங்கேட்டு உடன்படுத்தியிருந்தான். பின்னிட்டு எண்ணுதிருக்கையில் நேரிட்ட செய்தியால் அவன் துக்கசாகரத்தில் மூழ்கவும், தன் பிராணபதமாகிய மந்திரி குமாரத்தியை மறந்தான். அதன்பின் போலிப்பித்தனாக நாள்கழிக்க அவன் என்று நினைத்தானோ, அன்றுதொட்டு அவளைக் கண்டால், அறியாதவன்போலும், அநாதரிப்பவன்போலும் நடந்தான்.

குலமாதர்க்குரிய உத்தம குணத்தாற் சிறந்த மந்திரி குமாரத்தியோ, அரசன் மைந்தனை இரண்டகவாதியென்று நிந்திக்கவில்லை. அவன் பின்னிட்டுத் தன்னைச் சற்றும் அவமதிப்பதற்கு நிமித்தம், அவனுக்கு உண்டான மனத்துன்பமே தவிர, தன்னைக்குறித்து எவ்வளவும் நிர்த்தாக்ஷிணியமல்லவென்று அக்கன்னி தேறினாள். அன்றியும் குணசிரேஷ்டனாகிய அவனுடைய அந்தக்கரணங்களும், சிறந்த விவேகமும் அவனை வருத்தும் மிகுதுயரால் சீர்கெட்டிருப்பது நியாயந்தான்; இது தனித்தனி அடித்தால், செவிக்கினிய ஓசை தரும் திறமுள்ள மணிகளைக் கையறியாதவன் சேர்ந்தபடி முறைதவறி அடிக்க, அவை செவிக்கு வெடிப்பும் வெறுப்புமான ஒலி தருவது போலும் என்று அவள் பாவித்தாள்.

பிதாவைக் கொன்ற சிறிய தந்தையைக் கொன்று, தன் சபதத்தை முடிக்கும் வீண்டுந்தொழிற்குரிய உபாயத்தை இராப்பகல் எண்ணியவண்ணமாயிருந்த ராஜகுமாரனுக்கு மேற்படி மந்திரி புத்திரியை இந்துச்சொல்லி உபசரிக்கும் உல்லாசம் மற்றுமாம் பெண்ணைக் கூட அவன் மனம் இணங்குமா?

பெண்ணாசை விளையாடிந்திருக்கும் வீணர்க்குரிய பயனற்ற விநோதமென்று அவன் எண்ணத்திற் பட்டது. இவ்வாறு அவன் சிந்தை தந்தை பழி தீர்க்கும் துணிவில் அழுந்தியிருந்தும், ஒபீலியா என்னும் ஒப்பற்ற ரூபவதிமீதுள்ள அன்பைக் குறிப்பிக்கும் மிருதுவான நினைவு இடைக்கிடை அவனுக்கு உண்டாகாதிருக்கவில்லை. ஒரு முறை இம்மிருதுவான குணபூஷணியைத் தான் சிறிது அவமதித்ததற்கு நிமித்தம் இல்லையென்று எண்ணி, சிந்தை தடுமாறி, அவளுக்கொரு கடிதம் எழுதினான். அதில் விவேகவசம் தப்பி ஆசை மீறுவோர்க்குரிய வாக்கியங்கள் சில இருந்தன. அதனால், அவன் உன்மத்தனென்று நாலு பெயரும் உத்தேசிப்பது பொருத்தமெனவும், அன்பை ஒருவாறு குறிப்பிக்கும் இரண்டொரு இதவாக்கியங்கள் இருந்ததனால், தன்மீதுள்ள அன்பு ஆழ்ந்து அவன் அகத்தின் அடியில் அழுந்தியதெனவும் அந்தச் செல்வி நினைத்தாள். அவன் எழுதிய கடிதத்தில் வரம்பு கடந்து உற்புகழும் வாக்கியங்கள் அநேகம் இருந்தன. அவற்றில் இரண்டொன்று இவை:—"இராக்காலத்தில் எண்ணிறந்த தீபங்கள்போல விண்ணிற் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள் ஒளி மழுங்கி இருளினும் இருளும்; காலையில் கிழக்கே உதித்து, மாலையில் மேற்கே அஸ்தமிக்கும் பகலவனாகிய சூரியன் அசலமாக ஓரிடத்தில் நிற்பினும் நிற்கும்; எவருக்கும் பிரத்தியக்ஷமாகத் தோன்றும் சத்தியம் அசத்தியமாகப் புரளினும் புரளும்; உன்மீது எனக்குள்ள அன்போ, ஒருபொழுதும் அழியாது. இது உறுதியென்றறி." முறைமைப்படி மந்திரி குமாரத்தி இந்தக்கடிதத்தை விருத்தனாகிய தந்தைக்குக் காட்ட, அவன் அதை வெளியிடாதிருப்பது தகாதென்று எண்ணி, அரசனுக்கும் ராணிக்கும் அறிக்கை செய்தான். அன்றுதொட்டு அவர்கள் இருவரும். ஹாம்லெத் உன்மத்தனானதற்கு நிமித்தம் பெண்ணாசையென்றே உறுதியாக நம்பினார்கள். அதிசய ரூபியாகிய ஒபீலியாவைக் கண்டு மயங்கி அவன் புத்தி மாறுபட்டதனால் அச்சமில்லையென்றும், இனி அவள் நற்குண நற்செய்கைகளைக் கண்டு அவன் மயக்

கம் தெளிய, இருவரும் சௌக்கியமாய் வாழ்ந்திருப்பார்களென்றும் ராக்கினி எண்ணிப் பிரிவு கூர்ந்தாள்.

ஹாம்லெத்துக்கு வந்த வியாதியோ, அவள் நினைத்தபடி அற்ப வியாதியல்ல; ஆழ்ந்து வேரூன்றிய அசாத்திய ரோகம். அவன் கண்ட ரூபத்தை மறக்கவில்லை; அது ஓயாவண்ணம் அவன் எண்ணத்தில் உலாவியது. தன்னைக் கொன்றவனைக் கொன்று க்ஷாத்திரம் சாதிக்கத் தந்தை கற்பித்த கற்பனைப்படி செய்து தீர்க்குமளவும், அவன் மனம் பொறுத்திருக்கவில்லை, பதைத்தது. நினைத்த கருமம் முடிக்காமல் ஆலஸியஞ் செய்வது பிதிர்த்துரோகமென்றும், தந்தை சொல்லைத் தள்ளும் அதிக்கிரமமென்றும் அவன் எண்ணுதல் எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கினான். இடையறாமல் எப்பொழுதும் மெய்க்காவல்வீரர் சூழ்ந்திருக்கும் அரசனைக் கொல்லும் உபாயமோ, எளிதல்ல; ஒருவேளை எளிதாயிருப்பினும், ராக்கினி ஹாம்லெத்தின் தாய் பெரும்பாலும் அரசன் சமூகத்தை விட்டு நீங்காதிருந்தது அவன் எண்ணத்தை முடிப்பதற்குப் பலமான தடை. இந்தத் தடையை ஊடறுத்துச் செல்வது அசாத்தியம். மேலும், கிரீடத்தை உரிமையின்றிக் கவர்ந்த துரோகி அன்னியனல்ல; அவன் தாய் கணவன். இதை எண்ணவும், அவன் மனம் துன்பப்பட்டது; இவன் செய்த பிரதிக்கினையின் முனை மடிந்தது. ஹாம்லெத்தின் மெருகு இளநெஞ்சு; ஜீவவதை செய்வதை நினைக்கவே, அவன் உள்ளம் பதைபதைத்துத் திகைத்தது. அன்றியும், காட்பட்ட அவன் உள்ளத்தில் துக்கம் குடிகொண்டு துணிவு அழிந்ததனால், அவன் சித்தம் ஒரு வழியில் உறுதியாய் நிற்கவில்லை; ஓயாமல் சஞ்சலித்தது: ஆகவே, நினைத்ததை முடிக்கும் துணிவின்றிப் பலநாள் கழிந்தன. அல்லாமலும், அவன் கண்ட ரூபம் தந்தையின் ரூபந்தான் என்பதற்கும், நினைத்த வேஷம் அனைத்தும் கொள்ளும் திறமுள்ள பிசாசு துக்கத்தில் மூழ்கி அறிவு தடுமாறியிருக்கும் தன்னைக் கொலைசெய்யத் தூண்டிவிட்டுக் கூத்துப்பார்க்கத் தந்தை வடிவு தாங்கிவந்ததென்பதற்கும் விவரம் தெரியாமல், சந்தேக ஸ்திதியில் இருந்து அங்

வருந்தினான். பின்பு அவன் தன் கண்ணுக்குத் தோற்றிய ரூபம் மாயாரூபமாக இருந்தாலும் இருக்குமென்று எண்ணி நினைத்த கருமத்தைக் கைசோரவிடாமல் முடிப்பதற்கு மயக்கமற ஏதாயினும் திருஷ்டாந்தம் வேண்டுமென்று சற்றுப் பொறுத்திருக்கத் தீர்மானித்தான்.

கருமமுடிக்கும் துணிவின்றி அவன் மனம் இவ்வாறு தடுமாறியிருக்கையில், ஒரு நாள் அரண்மனைக்குக் கூத்தாடிகள் சிலர் வந்தார்கள். அதற்கு முன்னும் அவர்கள் அரண்மனைக்கு வந்து நடனஞ்செய்ததுண்டு. விருத்தனாகிய ட்ராய்வேந்தன் ப்ரயம் என்பவன் இறந்ததையும், அவன் பத்தினி ஹெக்யூபா துக்கங்கொண்டாடியதையும் விளக்கிய துயர் தரும் கதையை அவர்களில் ஒருவன் அபிநயித்துச் சொல்ல, ஹாம்லெத் மிகப் ப்ரீதியாய்க் கேட்டிருந்தான். அறிமுகமாயிருந்ததனால், இப்பொழுது மேற்படி கூத்தாடிகளைக் கண்டவுடன் ஹாம்லெத் நல்வார்த்தை சொல்லி, முன்பு தான் கேட்டுக் களிகூர்ந்த கதையைச் சொல்லச்சொன்னான். உடனே அபிநயன் பலம் குன்றிய அக்கிழவரசன் குரூரவதை செய்யப்பட்டதையும், அவன் குடிகளும் நகரமும் அக்கினிக்கு இரையானதையும், பருவமுதிர்ந்து உடல் மெலிவுற்ற ராஜபத்தினி, தன் நாயகன் இறந்த துயரத்தால் அறிவு மாறுபடி, கிரீடம் தரித்த சிரசில் கந்தையும், சிறந்த வஸ்திரங்கள் இழைத்த தங்கச்சரிகைப்பட்டாடை தரித்த இடையில் கம்பளிப் புடைவையும் அலங்கோலமாய்ச் சுற்றிக்கொண்டு, மலரிலும் மிருதுவான அடி வருந்த, பாதரக்ஷையின்றி அரண்மனை மேன்மாடத்திற்கும் கீழ்மாடத்திற்கும் ஓயாமல் பதைத்துத் துடித்து ஓடித் திரிந்ததையும், கண்ணுக்கெதிரில் காண்பதுபோல வர்ணித்துச் சொன்னான். அவன் வாய்ப்பிறப்புக் கேட்ட யாவர் உள்ளமும் கரைந்துருகக் கண்ணருவி பெருகியது. பலமுறை பற்பல இடங்களில் அபிநயித்து பழக்கப்பட்டிருந்த மேற்படி "கூத்தாடியும்" அரண்மனையில் இக்கதை சொல்லும்பொழுது, தான் அறியாவண்ணம் மனதுருகி நாக்

குளறி அழுதுவிட்டான். அதுகண்டு, ஹாம்லெத்: "இந்த அபிநயன் பாடியது நாடகமேதவிர வாஸ்தவமல்ல; அதில் பிராணவதை செய்யப்பட்ட அரசனையாவது, ராக்கினியையாவது இவன் ஒருபொழுதும் கண்டறிந்தவனல்ல; அவர்கள் இறந்து பல நூறு வருஷகாலம் சென்றது; தான் அறியாதவர்களைப்பற்றி எவரோ எழுதிவைத்த நாடகத்தை நாலு பெயர் கேட்கச் சும்மா சொல்லும்பொழுது, இவன் மனம் பதைத்து வருந்திப் புண்பட்டுக் கண்ணீர் சொரிந்து பெருகுமானால், இந்த ராஜ்யத்தில் செங்கோல் செலுத்தி எண் திசையிலும் கீர்த்தி காட்டிய என் தகப்பனைத் துடிக்கப் பதைக்க நஞ்சிட்டுக் கொன்ற பாதகன் இன்னானென்று அறிந்திருந்தும், அவனை நிர்த்தூளியாக்கும்படியான வெஞ்சினம் என் உள்ளத்தில் மூண்டு வளர்ந்தெரிய நிமித்தம் இருந்தும், நான் க்ஷாத்திரத்தை மறந்து விசாரமற்றிருக்கிறேனே, என் மனம் பகைப்பற்றுப் பொறுத்திருக்கின்றதே, ஆ ஆ! இதென்ன ஆச்சரியம்!!" என்று தனக்குள்ளே நினைத்தான். நடிப்போரையும், நடனத்தையும், நல்ல நாடகம் கேட்போர் மனம் அதன் துறையில் இறங்கி அனுபவிப்பதையும் பற்றி நினைத்தபொழுது இந்தக் கதை அவன் ஞாபகத்தில் வந்தது: ஒரு தேசத்தில் அபிநயன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் எவரும் அறியாமல் ஒரு மனுஷனைக் கொலைசெய்தான். அந்தத் துரோகி இன்னானென்று நாட்பட வெளிப்படவில்லை. பின்பு ஒரு நாள் அந்தக் கொலைஞன் ஓரிடத்தில் நடனஞ்செய்யும்பொழுது, நாடகசாலைக்குள்ளே ஒரு கொலைத்தொழில் நடந்தது. அக்குரூரச் செய்கையைக் கண்டவுடன், தான் முன்பு செய்த கொலைத் தொழிலைக் குறிக்கும் ஞாபகம் அன்று நடந்ததுபோல் அவன் மனக்கண்ணுக்கு எதிரே நின்றது. அவ்விருகொலைச் சங்கதிகளும் அற்பமும் தவறாமல் ஒத்திருந்தமையால், அவன் மனம் பரிதபித்தது; அந்நாள்வரையில் அடக்கியிருந்த அந்தரங்கத்தை அடக்கும் திறமின்றி, இன்னானைக் கொலைசெய்தவன் நான்தானென்று பலரும் அறிய நாடக

சாலையில் சொன்னான்.—ஹாம்லெத், "நல்லது, இக்கதை இந்தச் சமயத்தில் எனது ஞாபகத்தில் வந்தது எனக்குப் புத்தி புகட்டவென்று எண்ணுகிறேன். என் தகப்பன் கொலையுண்டு இறந்ததற்கு ஒப்ப, இவர்கள் ஒரு நாடகம் புரடி எனது சிறியதந்தை சமுகத்தில் நடிப்பார்களானால், அச்சமயத்தில் என் சிறியதந்தை முகத்தில் என்ன குணக்குறிகள் தோன்றுமெனக் கருத்துப் பொருத்திப் பார்த்திருப்பேன். பார்த்து, கொலைசெய்தவர் இவர்தாம் என்பதற்கும் அல்லவென்பதற்கும் உறுதி தெளிந்துகொள்வேன்" என யோசித்து, மேற்படி கூத்தாடிகளைக்கொண்டு ஒரு நாடகம் பாடுவித்தான். அரங்கேற்றுவிக்கும் தினத்தில் அவன் அரசனையும் ராக்கினியையும் அந்தச் சபைக்கு வரவழைத்தான்.

அவர்கள் இயற்றிய நாடகத்தின் தாற்பரியம் வியன்னா நகரத்தில் டியூக் பிரபு ஒருவன் கொலைசெய்யப்பட்ட சங்கதி. அந்தப் பிரபு பெயர் கன்ஜாகோ. பிரபு பத்தினி நாமம் பப்டிஸ்டா. மேற்படி டியூக் பிரபுவின் நெருங்கிய சுற்றத்தாருக்குள் லூஷியானு என்னொருவன் சொத்தை அபகரிக்கும் பொருட்டு, சிங்காரவனத்தில் பிரபுவை நஞ்சிட்டுக் கொன்றதும், அடுத்துச் சில தினத்தில் பிரபு பத்தினியைப் பிராணநாயகியாக்கிக்கொண்டதும் ஆகிய வரலாறுகள் அந்த நாடகத்தில் வர்ணிக்கப்பட்டன.

தன்னை அகப்படுத்த ஹாம்லெத் பொறியேற்றியது அறியாத அரசனும் பத்தினியும், மந்திரி முதலிய அரண்மனையாருடன் நடனசபைக்குப் போனார்கள். அரசனது முகக்குறியைக் கருத்தாய்க் கண்டறிய ஹாம்லெத் அருகில் உட்கார்ந்தான். நடனகாலக்ஷேபம் தொடங்கியது. முதலில் கன்ஜாகோ ராஜனுக்கும் ராக்கினிக்கும் சம்பாஷணை நடந்தது. அதில் ராக்கினி பிராணநாயகர்மீதுள்ள அன்பை வற்புறுத்தி வெளியிட்டாள். தன் நாயகர் இறந்து தான் விதவையாகச் சம்பவித்தால், மறுமணம் செய்வதில்லையென்று சத்திமொழி சொன்னாள். புனர்விவாகம் செய்தால், பதிவிரதம்

நிலைதிய பதகீலியாவேனென்று தன்னைத் தானே திட்டினு
அன்றியும், கொண்ட கணவனைப் பிராணவதை செய்யு
பாபிஷ்டகளன்றி, மற்றொருவரும் புனர்விவாகம் செய்ய
கண்டதில்லையென்று சாதித்தாள். நடனத்தில் இந்தக் குறி
யைக் கேட்டவுடன், சிறியதந்தை முகம் சற்று விகா
பட்டதையும், கன்ஜாகோ அரசன் மனைவி சொன்ன சொ
கள் தந்தைதாய் இருவருக்கும் தீங்கரும்புபோலத் தித்தி
மல், வேம்புபோலக் கசப்பாயிருந்ததையும் ஹாம்லெத் மை
சமறக் கண்டான். பின்பு சிங்காரவனத்தில் நித்திரைசெய்
கன்ஜாகோ அரசனை லூஷியானு நஞ்சிட்டுக் கொல்ல
போன காரியங்கள் அபிநயிக்கப்பட்டன. ஹாம்லெத்தி
சிறியதந்தை தன் சகோதரனாகிய அரசனை நந்தனவனத்தி
நித்திரைசெய்யும் சமயத்தில் நஞ்சிட்டுக் கொன்ற கதைய
இந்தக் கதையும் ஒத்திருந்தமையால், அவன் செய்த து
கம் அவன் நெஞ்சைக் கூரெழுத்தாணிகொண்டு குத்துவ
போலக் குத்தி வருத்தியது. அப்புறம் அங்கிருந்து நட
பார்க்க அவனால் ஆகவில்லை. சடிதியில் திவர்த்தி கொ
ளைச்சொல்லி, ஏதோ அசௌக்கியம் உண்டானதுபோ
நடனசாலையை விட்டு நீங்கி, அவன் பள்ளிகொள்ளும் ம
டபத்திற்குப் போனான். அசௌக்கியம் அவனுக்கு வா
வமாய் உண்டாயிருந்தாலும் இருக்கும். அரசன் போய்வி
ட்டதனால், நடனம் அம்மட்டில் நிறுத்தப்பட்டது. ரூபத்தி
வாய்ப்பிறப்பு மாறாத சத்தியமென்று நம்பத்தக்க திருஷ்ட
மும் ஹாம்லெத்துக்கு அரசன் முகக்குறியாலும் ஜாடையி
லும் விளங்கியது. பரம சந்தேகத்திற்கு ஆளாகி வருந்தே
னுக்குச் சடிதியில் அது தெளிந்து மனம் தேறும்பொழு
யிருந்த உல்லாசம் உண்டாவது இயற்கை, அவ்வண்ண
ஹாம்லெத்துக்கு உண்டாயிருந்த சந்தேகம் நிவிர்த்தியா
தந்தையைக் கொன்றவன் சிறியதந்தைதானென்னும் எ
ண்ணம் ஸ்திரப்பட்டவும், கொடிக்குள்ளே சொல்வதற்கரிய ஆ
ந்தமும் உல்லாசமும் அவன் உள்ளத்தில் பிறந்தன. ரூட
சொன்ன சொல் ஆயிரங்கோடி வராகன் பெறுமென்று அவ

ஹொரேஷோவுக்குப் பிரமாணிக்கஞ்செய்தான். தந்தை
யைக் கொன்ற துரோகி சிறியதந்தையென்று ஐயமற அறிந்
ததனால், கொலைக்குக் கொலைசெய்து பழிதீர்க்கும் உபாயத்
தைச் சூழ்ந்தறியத் தீர்மானித்தான். எற்கும் உபாயம்
எதென்று அவன் எண்ணத்தொடங்குமுன், அவனைப் பெற்ற
அருந்தாயாகிய ராக்கினி அந்தப்பு[illegible]க சம்பா
ஷணை செய்யும்பொருட்டு வர[illegible].

சமீபகாலத்தில் ஹாம்லெத்தின் விபரீத ஒழுக்கத்தால்
அரசனுக்கும் ராக்கினிக்கும் மிகு வியசனம் உண்டாயிற்
றென்று ஹாம்லெத்தை அந்தரங்கத்தில் அழைத்துச் செல்
அரசன் ராக்கினிக்குக் கற்பித்திருந்தான். ராக்கினி அரசன்
சொற்படி ஹாம்லெத்தை அந்தப்புரத்திற்கு அழைத்தனுப்
பூத், அந்தரங்கத்தில் நடக்கும் சம்பாஷணையை அரசன் சாங்
கோபாங்கமாய் அறிய விரும்பினான். [illegible]
தமாய் ஹாம்லெத்தின் வாய்ப்பிறப்பில் எதையாயினும் மறைத்
துக்கொள்வாளென்று சமுசயித்து, சம்பாஷணை முழுவதையும்
தவறாமற் கேட்டு அறிக்கைசெய்யப் பருவமுதிர்ந்த மந்திரியா
கிய பொலோனியூஸை அழைத்து, அரசன் அவ்வந்தப்புரத்தில்
உள்ள திரைமறைவில் அரவமின்றி இருக்கக் கற்பித்தான்.
மந்திரி பதுங்கியிருந்த இடம் தன்னை எவரும் காணாதிருக்கவும்,
ராக்கினிக்கும் மைந்தனுக்கும் நடக்கும் சம்பாஷணையைத்
தான் உள்ளபடி கேட்கவும் வாய்க்கும் இடம். பொலோ
னியூ வெகுகாலம் அரசர்க்குரிய சதுர்வித உபாயங்களில்
பயின்று முதிர்ந்தவன்; அந்தரங்கமான சங்கதிகளைத் தந்தி
ரமாகவும் சூதாகவும் அறியும் அபேட்சையுள்ளவன்; ஆத
லால், அரசன் இட்ட கட்டளையை ஏற்குமாறு நிறைவேற்ற
அவனிலும் அருந்திறமுடையோர் இல்லை.

ஹாம்லெத் தாய் கற்பித்தபடி அந்தப்புரம் சேர்ந்தவுடன்,
பட்டஸ்திரி "மகனே, உனக்கு இந்த விபரீத குணமும்
நடையும் வந்த காரணம் ஏது? உன் தந்தைக்கும் எனக்கும்
நீ செய்த நிந்தை மிகுதி" என வாக்குச்சிக்கை செய்தாள்.
(தந்தையென்று அவன் சொல்லியது சிற்றப்பனை—தன்னை

மறுமணஞ்செய்த காரணத்தால்) தந்தை என்னும் மொழி சாமானியமானதல்ல, மிக அரிது! எதனினும் பெரிது!! குரங்கின் கழுத்தில் மாலையிடுவதுபோலும், குப்பைவாரும் தொட்டிப்பத்திற்குக் குஞ்சங்கட்டித் தொங்கவிடுவதுபோலும், கண்ணுக்குக் கண்ணான தன் அரிய பிதாவைக் கொன்ற பரம துரோகிக்கு இந்தப் பெயரை எண்ணமின்றிச் சூட்டியதுபற்றி ஹாம்லெத்துக்குத் தாய்மேல் மூண்ட கோபத்திற்கு அளவில்லை. அவன் நெஞ்சைப் பிளக்கத்தக்க அம்புபோலும் கூர்மையுள்ள சொற்றொடர் அமைய, அவன்: "அம்மா, என் தகப்பனுக்கு மிகு மனக்குறை நீங்களே வருவித்தீர்கள்" என்று உத்தரம் சொன்னான். ராக்கினி இது பதர்ப்பேச்சு என்றாள். ஹாம்லெத்: "கேட்ட கேள்விக்கு ஏற்கும் உத்தரம் இது" என்றான். அப்பொழுது மஹாராணி மனம் நொந்து: "மைந்தா, நீ யாருடன் இப்படி முறைதவறிப் பேசுகிறாய்? நீ என்னை மறந்தாயா?" என்று வினவினாள். அதற்கு, ஹாம்லெத், "ஐயையோ! மறப்பேனானால் எனது பாக்கியந்தான், இந்தப் பாழ்மனம் மறக்காதாமே; நீங்கள் மஹாராஜ பெருமாட்டி, கொண்ட கணவர் இறக்க, கொழுந்தனுக்கு மனைவியான கோமாட்டி, என்னைப் பெற்ற சீமாட்டி, உங்களுக்கும் எனக்கும் இந்த முறைமை இல்லாதிருக்கப் பெற்றேனில்லையே" என மறுமொழி சொன்னான். இவ்வார்த்தை கேட்டவுடன், ராக்கினி: "உனக்கு இந்த விபரீதம் வந்ததா? நல்லது, இப்படி என்னை அவமதித்து வாய்திறவாதிருக்கச் செய்வாயானால், உனக்கு வார்த்தை சொல்லி, உன் வாய்மதம் அடக்கத்தக்கவர்களை உன்னிடத்திற்கு அனுப்புவேன்; உன் சாதுரிய சாமர்த்தியத்தை இருந்தறிவோம்" எனச் சினந்துரைத்து, அரசனையாவது மந்திரியையாவது அனுப்ப நினைத்து, போக எத்தனித்தாள். ஹாம்லெத் தாயை ஒரு அடியும் எடுத்துவைக்க விடவில்லை. அந்தப்புரத்தில் தனித்திருந்ததனால், அவள் செய்த அக்கிரமத்தைத் தன்னால் ஆகும் சாதுரிய சாதனங்கள் அனைத்தாலும் அவளுக்குத் தெரியக்காட்டி நற்புத்தி வருவிக்க நினைத்து, அவளைக் கைப்பி

டித்திழுத்துப் பலாத்காரமாய் உட்காருவித்தான். இவ்வாறு தன் மகன் பிடிவாதம் செய்ததுபற்றி ராக்கினிக்கு மிகு திகில் உண்டாயிற்று. பித்தனாகிய அவன் பிராணாபாயமான தீங்கு ஏதும் செய்யினும் செய்வானென்றெண்ணி, அவள் நடுநடுங்கிப் பதைத்து ஓலமிட்டாள். உடனே திரைமறைவிலிருந்து, எவரோ "போதும்! போதும்! பட்டத்திரிக்குத் தீங்கொன்றும் செய்யாதே!" எனத் தீவிரித்துரைக்கச் சொல்லும் சத்தம் கேட்டது. கேட்கவும், திரைமறைவில் இருப்பவன் அரசனென்று உறுதியாய் நம்பி, ஹாம்லெத் கடுஞ்சினத்தீ மூண்டெரியக் கத்தியை உருவி, சத்தம் கேட்ட இடத்தைக் குறித்து, ஓடும் எலியைத் தொடர்ந்து குத்திக் கொல்வதுபோல், அடுத்தடுத்து அநேகமுறை குத்தினான். அப்புறம் அந்தச் சத்தம் கேட்கவில்லை. அதனால், குத்துண்டவன் இறந்தானென்று மனம் தேறி, திரையை நீக்கி, பிரேதத்தைப் பிடித்திழுத்துப் பார்த்தான். குத்துண்டு இறந்தவன் அரசனல்ல, பொலோனியூ; ஒட்டுக்கேட்கத் திரைமறைவில் அழைப்பின்றி உட்கார்ந்த ஆசாரக்கள்ளனாகிய கிழமந்திரி பிரேதத்தைக் காணவும், ராக்கினி: "அடா பாவி! சிறிதாயினும் சிந்தனையின்றிப் படுகொலை செய்தாயே! இது என்ன கொடுமை!" என்று கூவினாள், பதைத்தாள், துடிதுடித்து நடுங்கினாள், மனம் வருந்தி அழுதாள். அவள் சொல்லையும், அவள் படும் பாட்டையும் கேட்கவும் பார்க்கவும் ஹாம்லெத்துக்கு மனம் சகிக்கவில்லை; அவன்: "என்ன சொன்னீர்கள், எனது அரிய மாதாவே, நான் படுகொலை செய்தேனென்றீர்களா? உங்களை மணம்புரிந்த அரசனைக் கொன்று, அவருடன் பிறந்த ஒருவருக்கு மனைவியாக உடன்பட்ட படுகொலைக்கு நான் செய்த இக்கொலை சம்மாத்திரம்?" என்று உக்கிரத்துடன் சொன்னான். அவன் இம்மட்டில் விட்டுவிடவில்லை, அந்தச்சாலையில் அந்தரங்கமாய் வைத்திருந்த சித்திரங்கள் அனைத்தையும் அப்பொழுது தாய்க்குத் தெளியச் சொல்லிக் கொடுத்ததால் அவனுக்குத் துணிவு பிறந்தது. பெற்றோருடைய குற்றம் குறைகளைப் பிள்ளைகள் பாராட்டாமல் கண்

சாவடையாய் விடுவது முறைமைதான்; ஆனாலும், பெற்ற தாய் பாதகமான அக்கிரமம் செய்தால், மகன் பதைப்பின்றிப் பார்த்திருக்கலாகாது; கண்டித்து எச்சரிக்கவேண்டும். இவ்வாறு நினைத்து கடுஞ்சொற் சொல்லி எச்சரிப்பது தாய்க்குற்றத்தைத் தூற்றவல்ல, நற்புத்தி கருவித்து, அவளை நல்வழிப்படுத்த, சற்குணமுடைய ராஜகுமாரன் தன் தாய் செய்த பாதகத்தை அவள் கன்னெஞ்சு மெழுகுபோல் கரைந்துருகி வருந்தும்படி எடுத்துப்புறப்பாய்ப் பின்வருமாறு பகுத்துக் காட்டினான். “அம்மா, சிறியேன் சொல்லும் எளிய சொல்லை மனதிரங்கிக் கேளுங்கள்: இறந்த அரசர் என் தகப்பன், உங்கள் கணவர். அவர் இறந்து இரண்டு மாசம் செல்லுமுன், அவர் சகோதரரும், ஊரறிய அவரைக் கொன்ற கொலைஞருமாகிய துரோகியை மணஞ்செய்ய உங்கள் மனம் உடன்பட்டதெப்படி? கன்னிப்பருவத்தில் உங்களை விவாகஞ்செய்த கணவருக்கு ஒரு காலும் பதிவிரதம் தவறுவதில்லையென்று வாக்குறுதி செய்த நீங்கள், அவருடன் பிறந்த ஒருவருக்கு முறை தவறி மனைவியாயினீர்களானால், இனிப் பெண்பாலார் வாக்குறுதியைத் திரணமாயினும் உலகம் நம்புமா? எவர் செய்த குற்றம் குறைகளுக்கும் உலகம் தாயென்பதை மறந்தீர்களா? இன்றுமுதல் மாதரிடத்தில் விளக்கும் நற்குண நற்செய்கைகள் அனைத்தும் மாயமே, தவிர வேறல்ல. விவாகஞ்செய்யும்பொழுது, மணமகளுக்கு மணமகன் செய்யும் உடன்படிக்கை சூதாடுவோர் வாக்கினின்றும் பிறக்கும் சத்தியத்திற்குச் சமானம்; அவர்கள் தேவபக்தி இந்திரசாலம்; அவர்கள் செய்யும் பிரார்த்தனை அர்த்தசாரமில்லாத பல சொற்கள் தொடுத்த மாலையே. எனது அரிய அன்னையே, உங்கள் துஷ்கிருத்தியத்தைக் கண்டு விண்ணோர் வெட்கி, கண்ணீர் விட்டார்கள்; மண்ணோர் மனம் வெந்து நொந்து மயங்கினார்கள். (பின்பு ஹாம்லெத் அங்கியுறைக்குள் வைத்திருந்த இறந்த அரசன் படத்தையும், இருந்த அரசனாம் துரோகி படத்தையும் எடுத்துக் காட்டி) இவ்விரு படங்களுக்குமுள்ள தாரதம்மியத்தைப் பாருங்கள்: என் தகப்பன் முகம்

கத்தலை களையுள்ளது? எவ்வளவு காந்தியுள்ளது? தங்கமயமாகத் துலங்கும் இம்முகம் விண்ணுலகில் வாழ்வோர் முகத்துக்கு எள்ளளவேனும் இளைக்குமா? சிரசில் சிறு மோதிரவடிவாகச் சுருண்டு மலைபோலப் படிந்திருக்கும் சிறந்த ரோமமும், வில்போல் வளைந்த எறநெற்றியும், விளக்கொளியொத்துத் துலங்கும் இரு விழிகளும், சிங்கேற்றுக்குச் சமானமாகிய கெம்பீரமான தோற்றமுமுள்ள, என் தகப்பன் உங்கள் கணவர். அவர் இறக்க, அவருக்குப் பிரதியாக நீங்கள் உள்ளம் உவந்து சேர்த்துக்கொண்ட கணவர் முகத்தை இதோ பாருங்கள்: இதுதான் அதிசய ரூபமாகிய என் தகப்பனைக் கருக்கி உலர்த்தி வதைத்த கடுந்தியன் முகம்! இம்முகத்தைக் காணும் எவர் மனமும் தீயும்! உடலும் தீயும்! இதன் நிழல் விழும் பயிர்வகைகள் அனைத்தும் தீயும்!”, என ஹாம்லெத் சொன்ன சொற்கேட்டு, தாய் தன் அகத்தில் உள்ள அந்தரங்கத்தை மகன் உள்ளபடி அறிந்து வெளியிட்டதை எண்ணி வெட்கி விறைத்து, மரம்போலச் செயலற்றிருந்தாள். கபடம் சூதும் கொடுமையும் நிறைந்த அவள் உள்ளம் அவளுக்கு அவலக்ஷணமாகத் தோற்றியது.

பின்பு ஹாம்லெத் “எனது அரிய மாதாவே, தங்கள் முதற்கணவரைச் சதிக்கொலை செய்து, அக்கிரமமாய்த் திருடனைப்போல் அவர் கிரீடத்தை அபகரித்த பாதகத்துரோகிக்கு இன்னும் மனைவியாயிருந்து அவனுடன் கூடி வாழ்வது தங்களுக்குத் திருப்தியாயிருக்கிறதா?” என்று கேட்டான். கேட்கவும், அவன் தந்தையின் ரூபம் அந்தப்புரத்தில் சடுதியில் தரிசனமாயிற்று. அது அச்சம் அவன் தந்தையைப் போலும், சமீபகாலத்தில் சாமக்காவற்சேவகருக்கும் அவனுக்கும் உயர்தளத்தில் தோன்றிய வடிவுபோலும் இருந்தது. ரூபத்தைக் கண்டவுடன், ஹாம்லெத்தின் சிர உறுப்புகள் அனைத்தும் அச்சத்தின் மிகுதியால் நிமிர்ந்து விட்டனவென்று உதறின, உதறியும், அவன் பயத்தைப் பாராட்டாமல்: “தாங்கள் இச்சமயத்தில் இவ்விடத்திற்கு வந்த காரணம் எது?” என்று வினவ, ரூபம் “உன் சொற்படி நீ பழிக்

குப் பழிவாங்க மறந்திருப்பாயென்று எண்ணி முன்சொன்ன சொல்லைப் பின்னும் உனக்கு ஞாபகப்படுத்த வந்தேன்; நீ உன் தாயுடன் இனிப் பேசாதிராதே; இருந்தால், அவளை வருத்தும் மிகு துயரும் திகிலும் அவள் உயிரை வதைக்கும்; இதற்கு ஐயமில்லை" என்று எச்சரித்து மறைந்தது. அவ்வந்தப்புரத்தில் தந்தையின் ரூபம் ஹாம்லெத் ஒருவனுக்கன்றி, அவன் தாய்க்குத் தோன்றவில்லை. அவன் அதைக் கண்டபொழுது, அது நின்ற இடத்தைக் குறிப்பித்து, இதோ ரூபம் வந்து நிற்கின்றது! பார்த்தீர்களாவென்று தாயைக் கேட்டான். அதன் குணம் ஆடை கோலம் முதலியவைகளைத் தான் கண்டபடி விவரித்துச் சொன்னான். தாய் தன் கண்ணுக்கு ஒன்றும் தோன்றவில்லை என்றாள். அந்தப்புரத்தில் அவன் கண்ணுக்குத் தோன்ற ஹாம்லெத் ஒருவனன்றி மற்றெவரும் இல்லாதிருக்க, ஹாம்லெத்துக்கும் அசரீரிக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டபொழுது, அவள் அத்தியந்த திகிலடைந்து நடுநடுங்கி வருந்தினாள். வருந்தியும், அவன் உன்மத்தனானதால், அவனுக்கு இந்த விபரீதம் உண்டாயிற்றென்று தனக்குத் தானே சமாதானஞ் சொல்லி, திகிலை ஒருவாறு தொலைக்கப் பார்த்தாள். அப்பொழுது ஹாம்லெத் வாய் திறந்து "அன்னையே, சொல்லக் கேளுங்கள்; பின்னும் ஒரு முறை எனது தந்தையின் ரூபத்தைப் பூலோகத்தில் வருவித்தது தாங்கள் செய்த அக்கிரமமே தவிர, மற்றொன்றுமல்ல. பித்தம் தலைக்கேறி ரூபத்தைக் கண்டதுபோலப் பாவித்து வீணிற் பிதற்றுகிறானென்றெண்ணி, பாவம் குடிகொண்ட தங்கள் உள்ளத்திற்கு இதஞ்சொல்லி, நிர்மூடியாயிருக்கிறீர்களே: இப்படிச் செய்வது தகாது. இதோ எனது நாடிபிடித்துத் தாதுகதி பாருங்கள்; நான் உன்மத்தனானால், நாடி படபடென்று விரைந்தோடுமே; கைநாடி சுகதேகத்திற்கு உரிய குணம் தவறாமல் மத்தியம கதியாக ஓடுவது தங்களுக்குத் தோன்றவில்லையா? தாயே, இனியேனும், என் புத்தியைத் தள்ளாதிருக்கத் தங்களை இரந்து கேட்கிறேன்: செய்த அக்கிரமத்

திற்கு இனி நிவர்த்தியில்லை; அதை மனம் நொந்து வருந்தி வாய் திறந்து கடவுளுக்கு அறிக்கை செய்யுங்கள்; இன்று முதல் அரசன் உறவைத் தவிர்த்து, இனி அவனுக்கு மனைவியாயிருக்கச் சொப்பனத்திலும் எண்ணாதிருங்கள்; இறந்த எனது தந்தையை நினைவுகூர்ந்து, அவர் குலத்திற்கும் கௌரவத்திற்கும் ஏற்க நல்வழிப்படுவீர்களானால், நான் தங்களை எனது அருமைத் தாயென நன்குமதித்து ஒரு வரம் கேட்பேன்" என வணக்கமாய்ச் சொன்னான். சொல்லும்பொழுது, அவன் இரு விழிகளினின்றும் கண்ணீர் அருவி பெருகிற்று. மகன் சொற்படி தவறாமல் நடப்பதாக ராக்கினி ஒப்புக்கொண்டாள். அவ்வளவிற் சம்பாஷணை முடிந்தது.

அதன்பின், சிந்தனையின்றித் தான் கொன்றவன் யாவனென்று ஆய்ந்தோய்ந்து பார்க்க ஹாம்லெத்துக்கு அவகாசம் இருந்தது. தன் கைக்கத்திக்கு இரையானவன் தனக்கும் பிராணபதமாகிய ஒபீலியா பெருமாட்டியின் தந்தை பொலோனியு மந்திரியென்று எண்ணி, பிரேதத்தைப் பிடித்திழுத்து, ஓரொதுக்கில் விட்டு, முன்பு உண்டாயிருந்த பதைப்பும் துடிப்பும் மூர்க்க வெறியும் ஆறவும், தான் செய்த படுகொலையை நினைத்துப் பரிதபித்து அழுதான்.

பொலோனியு மேற்சொல்லியவாறு நிர்நிமித்தமாய் இறந்ததைக் காட்டி, அரசன் இதுதான் சமயமென்று ஹாம்லெத்தை ராச்சியத்திற்கு அப்புறம் அகற்றினான். அரசன் ஹாம்லெத்து மூலமாய் காலடைவில் தனக்கும் பிராணபாயம் உண்டாகுமென்று ஏங்கித் திகைத்தான். ஹாம்லெத்தைப் பிரஜைகள் கண்ணுக்குக் கண்ணாக நேசித்தது அவனுக்குத் தெரியும்; அதனால், குடிகளுக்கு அஞ்சி, அவன் ஹாம்லெத்தின் மேலுக்குத் தீங்கொன்றும் செய்யாதிருந்தான். மற்றப்படி ஹாம்லெத்தைக் கொன்று ஒழித்திருப்பது அவனுக்கு இஷ்டந்தான்; அன்றியும், குற்றம் குறைகள் எத்தனை திரளாய்ச் செய்தும், ராக்கினி தான் பெற்ற பிள்ளை தன் உயிரினும் பெரிதென்று பாராட்டி அன்புகூர்ந்ததும் அரசன் அறிவான். இந்த யோசனைகள் அனைத்தையும் சிந்தையில்

வைத்து, தந்திரியாகிய அரசன் மந்திரியைக்கொன்று, ஹாம்லெத்தைப் பிராணதண்டனைக்குத் தப்புவிப்பவன்போலப் பாவனை காட்டி, கப்பலில் ஏற்றுவித்து இங்கிலாந்திற்கு அனுப்பினான். அக்காலத்தில் இங்கிலாந்து டென்மார்க்கு துரைத்தனத்திற்கு ஆதீனமாயிருந்தது. அங்கிலேய அரசன் டென்மார்க்கு அரசனுக்குத் திறை கொடுத்துவந்தான். அதனிற்க, ஹாம்லெத்துடன் அரண்மனையார் இருவர் அனுப்பப்பட்டார்கள். அங்கிலேய அரசனுக்கு டென்மார்க்கு அரசன் எழுதி, அவர்கள்வசம் அனுப்பிய கடிதத்தில், கப்பலினின்று இறங்கிக் கரைசேர்ந்தவுடன் ஹாம்லெத்துக்கு இன்ன காரணத்தால் பிராணதண்டனை செய்யவேண்டுமென்று விவரம் கண்டிருந்தது. கடிதத்தின் தாற்பரியம் இதுவே. கப்பல் ஏறின க்ஷணம் தொடங்கி ஹாம்லெத்தின் மனம் பதறிப் பதைத்துப் பல நினைவுகளால் வருந்தியது. அரசன் புனைசுருட்டு ஏதும் செய்திருப்பானென்று எண்ணி, ராத்திரி அரண்மனை உத்தியோகஸ்தர்கள் அயர்ந்து நித்திரை செய்யும்பொழுது, இதுதான் சமயமென்று, அவர்கள் வசம் இருந்த ராஜ திருமுகத்தை எடுத்து, அதில் பதிந்த தன் பெயரை மிகு சாமர்த்தியமாய் அழித்து, அரண்மனையார் இருவர் பெயரையும் பதிவுசெய்து, மடித்து, உடைத்த முத்திரையை மீண்டும் ஒட்டி, இருந்த இடத்தில் வைத்துவிட்டு, ஒன்றும் அறியாதவன்போலப் படுத்துத் தூங்கினான். பிற்பாடு கடற்கள்வர் அவ்வுருவைக் கவரக்கருதி எதிர்ப்பட்டார்கள்: ஆகவே, உருவில் இருந்தவர்களுக்கும் கள்வருக்கும் கடற்சண்டை தொடங்கிற்று. அச்சண்டையில் தனது ஆண்மையை விளக்கக் கருதி, ஹாம்லெத் கைக்கொண்ட கத்தி ஒன்றின் துணையொழிய, வேறு துணையின்றிச் சத்துருவின் கப்பலிற் பாய்ந்தான்; பாயவும், அவனேறிப்போன கப்பலில் இருந்தவர்கள் பயந்தோடி, நாக்குளறி, சண்டைக்கு நிற்க நிர்வாகமின்றி, ஹாம்லெத்துக்கு வந்தது வரட்டுமென்று எண்ணி, கப்பலைத் திருப்பி இங்கிலாந்துக்கு நேர்முகமாய் விரைந்து செலுத்திக்கொண்டு போனார்கள்.

அரண்மனை உத்தியோகஸ்தர்கள் இருவரும் ஹாம்லெத் கடிதத்தில் மாற்றி எழுதியபடி பிராணதண்டனைக்கு உரியவர்களானார்கள். கெடுகாலம் அவர்களைத் தேடி வரும் இடத்திற்குப் பிடரியைப் பிடித்து நெட்டுவதுபோல, அதிதுரிதமாய்த் தள்ளிக்கொண்டு போயிற்று.

ராஜகுமாரன் கடற்கள்வர் உருவில் அவர்கள் வசப்பட்டிருந்தான். வலிய வந்து தங்கள் கையிற் சிக்கிய கைதி குலத்தையும் பெருந்தகைமையையும் அறிந்த அக்கள்வர், இப்பொழுது இடர்படும் இளவரசருக்குச் செய்யும் எவ்வித உபகாரத்திற்கும் அவர் உற்ற சமயத்தில் தமக்கு ஏற்ற கைம்மாறு செய்யாதிராரென்று எண்ணி, ஹாம்லெத்தை மரியாதையோடு உபசரித்தார்கள்; தங்களால் ஆகத்தக்க உதவி சகாயம் அனைத்தும் உருவில் இருக்கும்பொழுது மனப்பூர்வமாய்ச் செய்வதாக வாக்கிட்டார்கள்; குறை ஏதாயினும் இருந்தால், அதை மறைக்காமல் தெரிவிக்க வருந்திக் கேட்டார்கள்; உருவை விரைவில் செலுத்தி, சமீபமாயிருந்த டென்மார்க்குக் கரையில் ஹாம்லெத்தை இறக்கிவிட்டு, அதிவிநயபக்தியோடு உபசரித்துச் செலவு பெற்றுப் போனார்கள். ஹாம்லெத்து இறங்கின இடத்திலிருந்து அரசனுக்குக் கடிதம் எழுதி, சமுத்திரமார்க்கத்தில் தனக்கு நேரிட்ட ஆபத்தையும், தான் தப்பிப்பிழைத்து மீண்டும் தன் தேசத்தில் வந்திறங்கியதையும், அடுத்த தினத்தில் தான் ராஜ சமுகத்திற்கு வர நினைத்திருப்பதையும் குறிப்பித்து அனுப்பினான். கடிதத்தில் குறித்தபடி மறு நாள் அவன் அரண்மனைக்குப் போனபொழுது, முதலிற் கண்ட காட்சி அவன் கண்ணையும் கருத்தையும் புண்ணாக்கி வருத்திய பரிதாபக் காட்சியாயிருந்தது.

ஹாம்லெத் கண்டது மற்றொன்றுமல்ல, அவன் உயிரினும் அரிதாய்ப்பற்ற யௌவன சுந்தரியாகிய மந்திரி குமாரத்தி ஒபீலியாவின் பிரேதோத்சவமே. தன்னாத பருவமுள்ள தந்தை இறந்த நாள் முதல் அந்தப் பாலிய சுந்தரியின் அறிவு மாறியது. தான் கண்ணின் கருவிழிபோல் எண்ணி நேசித்த ராஜகுமாரன் கைவாளால் தன் தந்தை அகாலமரணமடையும்படி

நேரிட்டதை நினைக்க நினைக்க, அவள் நெஞ்சில் நெருப்புப் பற்றி எரிந்தது; அவள் புத்தி யாதொரு விஷயத்திலும் பிரவர்த்திக்கவில்லை; அவள் பித்தம்பிடித்தவள்போலப் பிதற்றித் திரிந்தாள்; அவள் செய்த செய்கைகளெல்லாம் விபரீதம்; சில வேளை அரண்மனையைச் சேர்ந்த பெருமாட்டிகளுக்கு அன்றலர்ந்த புஷ்பங்களைக் கொண்டுபோய்க் கொடுத்து, அப்புஷ்பங்கள் இறந்த தந்தையின் பிரேதக்ஷேம உற்சவத்தைக் குறிப்பிக்கும் சின்னங்கள் என்பாள்; சில வேளை அன்பை விளக்கும் பாடல்களைப் பாடுவாள்; சில வேளை மரணத்தைக் குறிப்பிக்கும் கவிகளை ஓதுவாள்; சில வேளை எவ்வகை அர்த்தமும் இல்லாத வீண்சொற்களைத் தொடுத்துச் சொல்வாள்; அவள் குடும்பத்தில் நடந்த துக்க சங்கதியை அவள் சுத்தமாய் மறந்தவள்போல் நடந்தாள். வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு சிற்றாறு; அவ்வாற்றங்கரையில் அலரிச்செடியொன்று; அதன் கிளைகள் ஓங்கி வளர்ந்து ஆற்றிற் கவிந்ததனால், அவற்றின் பிரதிவிம்பம் ஜலத்தில் தோன்றிற்று. ஒரு நாள் ஒபீலியா பலவிதப் புஷ்பங்களாலும் இளந்தளிர்களாலும் சிறந்த மாலையொன்று தொடுத்து, எவரும் அறியாமல் அவ்வாற்றங்கரைக்குப் போனாள். போய், அங்கிருந்த அலரிச்செடியின் கிளை முனையில் பூமாலை கட்டித் தூக்கக் கருதி, அச்செடியில் ஏறினாள்; ஏறவும், ஒரு கிளை அவள் உடற்பாரம் தாங்காமல் வணங்கிச் சடிதியில் ஒடிந்தது; ஒடியவும், தொடுத்த மாலை கையிற் பிடித்தபடி அற்புத சுந்தரியாகிய மந்திரி புத்திரி ஆற்றிற் பொத்தென்று விழுந்தாள். அவள் தரித்த ஆடை ஜலத்தில் மிதக்க, அதன் ஆதரவால் சற்று நேரம் அமிழாதிருந்தாள். வந்த பிராணவிபத்து அவளுக்கு எள்ளளவும் தோன்றவில்லை. களிகூர்ந்து குதிகொள்ளும் நீர்வாழும் சமுதலிய ஜெந்துக்களைப்போல், ஒபீலியா மகிழ்ந்து சில பூர்வ பாடல்களைப் பாடினாள். வர வர வஸ்திரம் நனைந்து நீரில் அமிழவும், பாவிய மந்திரி குமாரத்தியும் நீர் முகத்தில் உருத் தோன்றாமல் முழுகி, ஆற்றின் அடித்தரையில் படிந்த சேற்றிற் பொதிந்து இறந்தாள். ஹாம்லெத் அரண்மனையிற் சேர்ந்

த பொழுது, அரசனும் ராக்ஞியும் அரண்மனை உத்தியோகஸ்தரும் கூடிய சபையில் மந்திரி குமாரன் லேயர்த்திஸ் கொண்டாடியது ஒபீலியாவின் பிரேதக்ஷேம உற்சவந்தான்.

அச்சமயத்தில் அங்கே நிறைவேறிய சடங்குகளின் தாற்பரியம் ஏதென்று ஹாம்லெத்துக்குத் தெரியாது. அவன் பூராயமாய்க் கேள்வி கேட்டு நடந்த கிரியைகளைத் தடுக்க விரும்பவில்லை; ஒரு பக்கத்தில் ஒதுங்கிப் பார்த்துக்கொண்டு நின்றான். விவாகத்திற்கு முந்தி இறக்கும் கன்னிகைகளின் பிரேதம் க்ஷேமிக்கப்படும் விதானத்தில் புஷ்பங்களை அள்ளி இறைப்பது வழக்கம். தொன்றுதொட்டுள்ள அவ்வழக்கத்தைச் சார்ந்து, அப்பொழுது பரிமளிக்கும் புஷ்பங்கள் திரளாய்த் தூவப்பட்டன. தூவியது ஹாம்லெத்தின் அருந்தாயாகிய பட்டஸ்திரியின் கை. தூவும்பொழுது, ராக்ஞி "மதுர குணத்திற்கு மதுர வாசனை! தேனிலும் இனிய சகுணத்தால் சிறந்த கன்னியே, நான் உனது பிரேதாலயத்தில் மலர் தூவுவேனென்று எண்ணியிருக்கவில்லை; உனது மணவறையில் நவமணிகள் அழுத்திய அழகிய மஞ்சத்தை அன்றலர்ந்த புஷ்பமாலைகளால் அலங்கரிக்கும் நாள் எப்பொழுது வருமென்று எதிர்பார்த்திருந்தேன். எனது உள்ளம் ஒன்று, திருவுள்ளம் ஒன்றாக முடிந்தன. நீ இதற்கு முந்தியே என் மைந்தன் ஹாம்லெத்தின் பிராணநாயகியாக இருக்கவேண்டியது!" என மொழிந்தாள். ஒபீலியாவின் சகோதரன் அந்தப் பிரேதஸ்தலத்தில் அலங்காரமான நீலோத்பல புஷ்பச் செடிகள் முளைத்தால், கண்ணிற்கு வெகு அழகாய்த் தோன்றுமெனத் தன் உள்ளத்தின் அபேட்சையை வெளியிட்டு, சடிதியில் துக்கம் முதிர்ந்து வந்த பைத்தியத்தால் பிரேதக் குழிக்குள் குதித்து, கூட நின்றவர்களைப் பார்த்து, "என் சகோதரி உடலும், எனது உடலும் இந்தக் குழியில் க்ஷேமிக்கப்படும்பொருட்டு, மண்ணகழ்ந்து என்மேல் மலைபோலக் குவியுங்கள்" எனக் கற்பித்தான். அவன் வாய்ப்பிதற்றுக் கேட்டவுடன் ஹாம்லெத்துக்கு மறதியாயிருந்த ஒபீலியாவின் நினைவும், அடக்கமாயிருந்த அன்பும் திரும்பின; திரும்ப

வும் "எனது பிராணபதுமாகிய பெண்ணின் சகோதரனுக்கு உண்டான துக்கம் என் துக்கத்துக்கு மிஞ்சுவது கண்டு இன்னும் இவ்வுயிர் வைத்திருப்பது முறைமையல்ல! இவனைப் போல நாற்பதினாயிரம் சகோதரர் இருந்தாலும், அவர்களுக்கு அவள்மீதுள்ள அன்பு எனது அன்பிற்கு ஈடாகாதே!" என்று ஹாம்லெத் எண்ணினான். அகத்தழகு முகத்தில் தெரியும். அவன் உள்ளத்தில் நிகழ்ந்த எண்ணம் முகத்தில் பிரதிபலித்தது. அகமும் புறமும் அவன்மீது அன்புமயமாகப் பரிணமித்த ஹாம்லெத்துக்கு நின்ற நிலையில் பித்தம் தலைக்கேறியது; உடனே, அவனும் பிரேதக்குழிக்குள் பாய்ந்தான். அங்கே நின்ற லேயர்டீஸ், தன் தந்தை, சகோதரி இருவர் மரணத்திற்கும் காரணனாயிருந்த ஹாம்லெத் அவனென்றறிந்து, கோபாக்கினி இரு விழிகளினின்றும் கக்க, ஒரு கும்பத்தில் இணைக்கொலை செய்த பாபிஷ்டனாகிய அவனைக் கழுத்தினைப் பிடித்தான். இருவருக்கும் மற்போர் தொடங்குமுன், பக்கத்தில் நின்றவர்கள் விரைவாய் அவர்களை விலக்கிவிட்டார்கள். பின்பு பிரேதக்ஷேம உற்சவம் நடந்தேறியது. அது முடிந்தபின், லேயர்டீஸோடு எதிர்ப்பவன் போலச் சிந்தனையின்றிப் பிரேதக்குழிக்குள் தான் குதித்தது முறைமையல்லவென்று ஹாம்லெத் அறிக்கைசெய்து, மன்னிப்புக் கேட்டான். ரூபத்தில் ஒருவரும் இணையில்லாத ஒபீலியாவின் மரணத்தைப்பற்றித் தனக்கு உண்டான துக்கத்திற்கு மற்றொரு துக்கமும் மிஞ்சுவதைப் பார்த்திருக்கச் சகிக்கும் திறம் தனக்கு இல்லையென்று சொன்னான். அவ்வேளையில் இக்குலமக்கள் இருவரும் விரோதம் மறந்து, மனங்கலந்து உறவாடுவோர்போலக் காணப்பட்டார்கள்.

தந்தையும் சகோதரியும் இறந்ததுபற்றி, லேயர்டீஸுக்கு வந்த துக்கத்தையும், ஹாம்லெத்மீது மூண்ட சினத்தையும் சார்ந்து, ஹாம்லெத்தின் பிராணனை வாங்க, கெடுமதி இடைவிடாமற் குடிகொண்டும் நெஞ்சுடையோனாகிய அவ்வன் சிறியதந்தை யுனைகருட்டுச் செய்தான். அரசன் லேயர்டீஸை அந்தரங்கத்தில் வரவழைத்து, 'நீ ஹாம்லெத்

னுடன் கலந்து சம்பாஷித்துறவாடி, சிலம்பவித்தையில் அவன் மிக்க சாமர்த்தியனென்று பரிகசித்தறிவோம்; இதற்கு உனக்கு இஷ்டமாகில் எனக் கபடமற்ற மித்திரனைப்போலக் கேள்' என்றான். இவ்வாறு லேயர்டீஸ் கேட்டவுடன், ஹாம்லெத் உடன்பட்டான். சிலம்பவித்தை செய்யும் தினம் குறிக்கப்பட்டது. அன்று அவ்விருவர் கற்ற வித்தையின் அதிசயம் பார்க்க அரசன் முதல் அரண்மனை உத்தியோகஸ்தர்கள், அனைவரும் சிலம்பக் கூடத்திற் சேர்ந்தார்கள். அதற்கு முன்னிட்டு லேயர்டீஸ் ஒரு படைக்கலத்திற்கு நஞ்சூட்டி வைத்திருந்தான். இது அரசன் அவனுக்குக் கற்பித்த சூது. கத்தி கைக்கொண்டு சிலம்பம்பண்ணும் அரிய வித்தையில் ஹாம்லெத், லேயர்டீஸ் இருவரும் அதிசய சாமர்த்தியமுள்ளவர்களென்பது லோகப்பிரசித்தம். அதனால், அரண்மனை உத்தியோகஸ்தர் அவரவர் மனம் போன போக்கில் ஆளுக்கு ஒருவனை வியந்து ஓட்டம் வைத்தார்கள். சிலம்பக் கத்திகள் சாதாரண கத்திகளைப்போலக் கருக்குள்ளவைகள் அல்ல; கூர் மழுங்கியவைகள். இது எக்காலத்திலும் எத்தேசத்திலும் இயற்கை. லேயர்டீஸ் செய்த சூதைச் சொற்பமேனும் அறியாத ஹாம்லெத் சிலம்பக் கூடத்தில் முறைமைப்படி வைத்திருந்த கூர் மழுங்கிய கத்திகளில் ஒன்றை எடுத்தான். லேயர்டீஸ் கைக்கொண்ட கத்தியை அவன் பார்க்க நினைக்கவில்லை. சிலம்பஞ்செய்ய லேயர்டீஸ் சேகரித்த கத்தி கருக்குள்ளது, அரசன் குறிப்பித்த சர்ப்பனைப்படி நஞ்சூட்டியது. இதன் அந்தரங்கம் இவ்வாறிருக்க, இருவருக்கும் தொந்த யுத்தம் தொடங்கியது. ஆரம்பத்தில் லேயர்டீஸ் எண்ணிய சூதை நிறைவேற்றாமல், இஷ்டனுடன் இன்பமாய்க் காலக்ஷேபம் செய்பவன்போலத் தோன்றினான். இரண்டொரு முறை தன்னை ஜெயிப்பதற்கு ஹாம்லெத்துக்கு இடம் கொடுத்தான். கபடியாகிய அரசன் ஹாம்லெத்தின் வித்தியாதிசயத்தை மிகப் புகழ்ந்து பாராட்டி, அவன் வெற்றி சிறந்த வீரனென் வெளிப்பட வேண்டுமென்றும் விருப்பத்தைக் குறிப்பிக்கத் திராக்ஷை

பாணம் பண்ணினான். அன்றியும் ஹாம்லெத்தே சிலம்பத்தில் வெல்லவென்று கன திரவியமும் ஒட்டம் வைத்தான். நாலைந்து வட்டம் மேற்சொல்லியவாறு ஆடியபின், லேயர்ட்டெஸுக்கு வீராவேசம் உண்டாயிற்று. அவன் கொடூர நஞ்சூட்டிய கூர்முனைக் கத்தியை வேகமாய் வீசி ஹாம்லெத்தை ஒரு குத்துக் குத்தினான். அது பிராணபாயமான குத்து. யுத்தத்தில் லேயர்ட்டெஸுக்கு உற்சாகம் உண்டானது கண்டு, ஹாம்லெத்துக்கு மிகு சினம் மூண்டது. உள்ளுக்குள்ளாக நடந்த படு சர்ப்பனையை எள்ளளவும் அறியாத ஹாம்லெத் கூர்மழுங்கிய கத்தியால் வீசும் வீச்சு என்னத்திற்கு உபயோகப்படும்? தன்னைப்போல் எதிரியையும் நிஷ்கபடியென்று நினைத்து, ஹாம்லெத் இளைக்காமல் அவனுடன் நெருங்கி யுத்தஞ்செய்தான். கை கலந்து சிலம்பஞ் செய்தபொழுது, லேயர்ட்டெஸ் வைத்திருந்த நச்சுக்கத்தி ஹாம்லெத்தின் வசப்பட, இவன் கத்தி அவன் கைவசப்பட்டது. உடனே ஹாம்லெத் லேயர்ட்டெஸின் கூர்முனையுள்ள நஞ்சூட்டிய கத்தியினாலேயே லேயர்ட்டெஸை ஒரு வீச்சாக வீசிக் குத்தி விழுத்தினான். பறிகுழி வெட்டினோர் அதில் விழக்கடவர் எனும் பழமொழிப்படி, லேயர்ட்டெஸ் பிறனுயிரைக் கொல்லச் செய்த சதி அவன் உயிருக்கே நாசமாகப் பலித்தது. இவன் கதி இப்படி இருக்க, அந்த நிமிஷத்திலேயே ராக்கினி எவரோ தனக்கு நஞ்சிட்டாரென்று பதறிக் கதறிக் கூவினாள். அந்தரங்கம் இது: சிலம்பத்தில் களைத்து வெயர்த்து, ஹாம்லெத் தாகசாந்திக்குப் பானவர்க்கம் ஏதாயினும் வேண்டுமென்று கேட்டால், அந்தக்ஷணமே கொடுக்க எத்தனமாக, குடிகேடனாகிய அரசன் ஒரு கிண்ணம் நிறையத் திராக்ஷாரசபானம் விட்டு, அதில் நஞ்சு கலந்து வைத்தான். லேயர்ட்டெஸ் சிலம்பவித்தியாசமர்த்தில் ஹாம்லெத்துக்கு இளைத்தால், அரசன் ஹாம்லெத்தைத் தப்பாமல் கொல்லும்படி செய்த உபாயம் இது. மோசம் நாசம் என்பதற்கு அரசன் இதில் பின்னும் ஒரு திருஷ்டாந்தம் கண்டான். அவன் ஹாம்லெத்துக்குச் செய்

திருக்கும் சர்ப்பனையைக்குறித்து ராக்கினிக்கு அறிக்கை செய்ய மறந்துபோனான். ஹாம்லெத்தின் பிராணனை வாங்கக் கருதி, அரசன் எத்தனஞ்செய்துவைத்த விஷபானத்தை ராக்கினி வகைமோசமாய் எடுத்துக் குடித்து மரணவேதனைப்பட்டு, பானத்தில் எவரோ நஞ்சிட்டாரென்று கூவிக்கொண்டு இறந்தாள். ஏதோ சதி விளைந்ததென்று சமுசயித்து, ஹாம்லெத் அம்மண்டபத்தின் கதவுகளைத் தாமசமின்றிப் பூட்டுவித்து, நடந்த சர்ப்பனை யாதென்று மிகுந்த கருத்தாக விசாரித்தான். அப்பொழுது லேயர்ட்டெஸ் நச்சுக்கத்திக் குத்துக் காயத்தால் வருந்திச் சாகுந்தறுவாயில் இருந்தான். பிராணன் போகச் சற்று முந்தி அவன் ஹாம்லெத்தைப் பார்த்து: "சதிசெய்தவன் மற்றெவனுமல்ல, நான்தான். கூர்மழுங்கிய கத்திக்குப்பதில் கருக்குள்ள கத்தியைச் சூதாய்ப் பிரயோகித்தேன். அன்றியும், அதனாற் குத்துப்பட்டவர்கள் தப்பாதிறக்கும்படி அதற்கு விஷமூட்டியிருந்தேன். என் சூது எனக்கே வினையாக முடிந்தது. எனது நச்சுக்கத்தியால் உனக்குப் பட்டகாயம் அற்பமென்று எண்ணாதே. அக்கத்தி சாமானியமானதல்ல. அதன் முனையில் உயிரை வதைக்கும் விஷம் விளங்குகின்றது. அக்கத்தியால் பட்ட காயத்திற்கு மருந்தில்லை. நீ சாக இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. நான் செய்த துரோகத்தைச் சித்தம் இரங்கி இன்றெனக்கு மன்னிப்பாயானால், எனது பிராணன் வேதனையின்றி இவ்வுடம்பை விட்டுப் பிரியும். இத்தீங்கை யூகித்துச் செய்த பரம துஷ்டன் அரசன்" என அந்தரங்கம் அறிக்கை செய்து இறந்தான். ஹாம்லெத்துக்கும் மரணம் கிட்டியது. சதிக்கத்திவாயில் பின்னும் விஷம் சிறிது இருந்ததறிந்து, ஹாம்லெத் திடீரென்று எழுந்து, எந்தத் தீங்குமெண்ணாமற் செய்யும் கபடியாகிய தன் சிற்றப்பன் வயிற்றில் விசைகூட்டி ஒரு குத்துக் குத்தினான்; குத்தவே, தந்தையின் ரூபத்திற்கு அவன் இட்டிருந்த வாக்குத் தடையற நிறைவேறிற்று. இவ்வாறு தந்தையைக் கொன்ற துரோ

மாவா ஹாம்லெத்துக்குச் சமாசாரம் கூறைந்து, உயிர் போக எத்தனமாயிருந்தது. இத்தக் கபடநாடகமுழுதும் எதிரில் நின்று பார்த்துக்கொண்டிருந்த பிராண சிநேக னாகிய ஹொரேஷியோவைத் திரும்பிப் பார்த்து, ஹாம்லெத் "எனது உயிரினும் அரிய தோழா, இறக்குஞ் சமயத்தில் என் சொல்லைத் தட்டாதே; நான் இறந்தால் நீயும் என்றோடு இறப்பதாக அன்று சொன்னதை மறந்துவிடு. நீ தீர்க்கா யுள் பெற்று, இங்கே நடந்த அக்கிரமத்தையும், அதன் முடிவையும் வெளிப்பிரசித்தம் செய்" என வருந்திக் கேட்டான். ஹொரேஷியோ சங்கதிகள் அனைத்தையும் மறைக் காமல் உள்ளபடி வெளியிடுவதாக வாக்குத்தத்தஞ்செய்தான். அந்த வாக்குச் சொல்வதற்கரிய பல செய்திகளால் புண்பட் டிருந்த ஹாம்லெத்தின் மனநோவை ஆற்றும் அமுத வாக் காய் பலித்தது. ஹொரேஷியோவும், கூட நின்ற பிறரும் கண்ணீர் ஆறாகப் பெருக ஊனம் கசிந்துருகி, இனிய குணசீல னாகிய ராஜகுமாரனது ஆத்மாவை விண்ணின் சஞ்சரிக் கும் ஆத்ம பரிபாலகராகிய சம்மனசுகள் காக்கக்கடவராக வென்று ஆசீர்வசனம் சொன்னார்கள். ஹாம்லெத்து இனிய குணங்கள் அனைத்தும் உள்ளவன், எல்லாரையும் தன்னுயிர் போலெண்ணி அன்புகூர்ந்தவன்; உயர்குலத்தோர்க் கும், விஸ்தாரமான ராச்சியத்தைக் கட்டி ஆளும் அருந்தி றமுள்ள அரசர்க்கும் உரிய சிறந்த லக்ஷணங்கள் உடைய னானென்று யாவரும் விரும்பி மதிக்கப் பெற்றவன். வாழ் நாள் இவ்வாறு குறுகாதிருக்குமாகில், டென்மார்க்கரின் எவரும் இவனுக்கு இணையல்லவென்று யாவரும் மனம் வாக்கு ஒத்துச் சொல்லத்தகும் ராஜ லக்ஷணங்கள் அனைத் தும் உடையோனும், அவன் மேலு மேலும் வெற்றி சிறந்து, எட்டுத் திக்கும் புகழ் நாட்டுவதற்கு ஐயமில்லை.

—————

116909

சென்னைப் பாடசாலைப் புத்தகச்சங்கத்தார் விற்பனைசெய்யும்

புத்தகங்களின் பட்டி.

	அணா
இந்துதேசத்துச் சிற்ப சித்திர நீதநூல்	1
நீராவியும், நீராவி இயந்திரமும்	1
ஜார்ஜ் ஸ்டீவின்சன் என்னும் இருப்புப்பாதை சிற்பசாஸ்திரி சரித்திர சங்கிரகம்	1
லார்ட் க்ளைவ் சரித்திரம்	1
கொலம்பஸ் சரித்திரம்	1
லீயர் மகாராஜன் கதை	1
ஓதெல்லோ டெஸ்டிமோனா இவர்களுடைய கதை	1
அத்தேனே நகரத்து தைமன் சரித்திரம்	1
இளமையிற் கல் அல்லது அஞ்சுதிருடர் கதை	2
பாலவியாபாரிகள் கதை	2
பூகம்பம், எரிமலை இவைகளின் வரலாறு	3
அந்தி கதை	4
பௌதிக பூகோளம்.—தமிழ் மொழிபெயர்ப்பு படங்களுடன்	4
பூமிசாஸ்திரபடங்கள்.—10 அடங்கிய புத்தகம்	12

ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள்.

வெனிஸ் வர்த்தகன்	1
மக்பெத்	1

காளிதாசன் முதலிய மஹாகவிகள் செய்த ஸம்ஸ்கிருத நாடகக் கதைகள்.

மாளவிகாக்கினிமித்திரம்	1
விக்கிரமோர்வசி	1
உத்தரராமசரித்திரம்	1
ரத்நாவலி	1
சாகுந்தலம்	2

அறிவிப்பு.

ஜநவிநோதினி.

இஃது

நீதியும் விநோதமுமான விஷயங்களைக் கொண்டிருக்கிற

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

விலை அணா 2.

வருஷத்துக்குக் கையொப்பம் ரூபாய் 1½.

வெளிநாட்டிலுள்ளோர் (சென்னையில் நுங்கம்பாக்கம் பழைய காலேஜில்) இந்தச் சங்கத்தாரின் காரியதரிசி பேருக்குத் தபால்முத்திரையாகவாவது, மணி ஆர்டராகவாவது, இன்னும் வேறு ரூபாந்தரமாயாவது ரூ. 1-14-0 மாத்திரம் அனுப்பினால், இந்தச் சித்திரவிநோதத்தோடுகூடிய ஸஞ்சிகை பன்னிரண்டுமாதத்திற்கு அவரவர்களிருக்கும் ஸ்தானத்திற்கு வந்து சேரும். சென்னை நகரத்திலிருக்கும் கையொப்பக்காரர் வருஷம் ஒன்றுக்கு 1½ ரூபாய்தான் கொடுக்கவேண்டும்.

நூதன கையொப்பக்காரர்கள் எந்தமாதத்தில் சேர்ந்தாலும் வருஷத்துச் சந்தாவை முழுதும் அனுப்பினால், முன்பட்ட மாதங்களின் ஸஞ்சிகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

☞ சென்னை ராஜதானியைப்பற்றிய சங்கிரகமும் அந்த ஜில்லாவின் விவரணமும் சேர்ந்த தனிச்சஞ்சிகைகளாகப் பதிப்பிக்கப்பட்ட சிறு புஸ்தகங்கள் சித்தமாயிருக்கின்றன.— புஸ்தகம் ஒன்றுக்கு விலை 6 பைக்கு அதிகமில்லை.

2170

(1)	(2)	(1)	(2)